




# தினக்குரல்

யாழ் தினக்குரல் THINAKKURAL

AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL

Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com





ஓசை : 020 குரல் : 268 செவ்வாய்க்கிழமை 07 டிசம்பர் Tuesday 07th December 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/= பக்கங்கள் : 12

# மாற்று பாராளுமன்றம் அமைத்தது எதிரணி

## பாராளுமன்ற அமர்வை புறக்கணித்து நேற்றுமுதல் ஆரம்பம்



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

பாராளுமன்ற அமர்வை புறக்கணித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் வெளியே மாற்று பாராளுமன்றம் என்ற பெயரில் கூட்டத்தை நடத்தியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமை அலுவலகத்தில் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான எதிர்க்கட்சியின் பாராளுமன்றம் என்ற தொனிப்பொருளில் நேற்று திங்கட்கிழமை இந்தக் கூட்டத்தை நடத்தியுள்ளனர்.


இந்தக் கூட்டத்தில் பாராளுமன்றத்தில் விவாதத்தில் உரையாற்ற வேண்டிய விடயங்களை அங்கிருந்து உரையாற்றியுள்ளனர். பாராளுமன்றத்தில் நேற்று நகர அபிவிருத்தி

பக்கம் 02

-பாராளுமன்ற வரலாற்றில் முதல் தடவையாக

# விவாதத்தை முடக்கிய எதிரணியின் 10 ரூபா

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்



எதிர்க்கட்சிகளின் புறக்கணிப்பால் இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் முதல் தடவையாக வரவு – செலவுத்திட்டத்தில் இரு அமைச்சுக்கள் மீதும் 5 இராஜாங்க அமைச்சுக்கள் மீதும் விவாதம் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டதுடன் எதிர்க்கட்சிகள் இன்றியும் விவாதமின்றியுமே இவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் அரசினால் அங்கீகரிக்கப்பபட்டு நிறைவேற்றப்பட்டன.

இரு அமைச்சுக்கள்-5 இராஜாங்க

பக்கம் 02

# நாவற்குழியில் நேற்றிரவு வாள்வெட்டு; இருவர் காயம்

தென்மராட்சி - நாவற்குழி புதிய குடியேற்றப் பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் இரு பகுதியினருக்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் வாள் வெட்டில் முடிந்துள்ளது.

இதில் 20, 21 வயதுடைய இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-44)

# இலங்கையின் செயல்களால் இந்தியா கடும் அதிருப்தி



இலங்கையின் அண்மைக்கால நடவடிக்கைகள் குறித்து நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவிடம், இந்தியா அதிருப்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு நிதி அமைச்சர்

பக்கம் 02

# முன்னாள் போராளிகளுக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல்

-கண்காணிக்கப்படுதாகவும் தெரிவிப்பு -



அரசாங்கத்தின் அச்சுறுத்தலுடன் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றோம் என முன்னாள் போராளியான செ.அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்ததாவது,

பக்கம் 02

# யாழ்ப்பாணத்தில் டெங்கு ஆபத்து

சுகாதார பணிப்பாளர் எச்சரிக்கை




யாழ்ப்பாணத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கும் ஆபத்தான சூழல் காணப்படுவதாக வடக்கு மாகாண சுகாதார

பக்கம் 02

# வழமைபோல் சமையல் எரிவாயு விநியோகம்

க.பிரசன்னா

நாட்டில் எரிவாயு கசிவினால் தொடர்ச்சியாக ஏற்பட்ட வெடிப்புச் சம்பவங்கள் காரணமாக எரிவாயு கலவை தொடர்பில் சர்ச்சை எழுந்த நிலையில்

பக்கம் 02

# முல்லைத்தீவு கடலில் மூழ்கிய 3 இளைஞர்களும் சடலங்களாக மீட்பு

முல்லைத்தீவு கடலில் குளிக்க சென்றவேளை நீரில் மூழ்கிய வவுனியாவை சேர்ந்த 3 இளைஞர்களும் உயிரிழந்தனர்.

இவா்களில் ஒருவரின் சடலம் உடனடியாக மீட்கப்பட்ட நிலையில் தேடுதலில் பின்னர் ஏனைய இரண்டு இளைஞர்களும் நேற்று சடலங்களாக மீட்கப்பட்டனர்.

வவுனியா - மதகு வைத்தகுளம் பகுதியைச் சேர்ந்த 27 வயதான மனோகரன் தனுசன், வவுனியா - தோணிக்கல்

பக்கம் 02



# பிரியந்த குமாரவின் உடல் வந்தது



பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் உடல் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான யூ.எல் 186 என்ற விமானத்தின் ஊடாக நேற்று மாலை 5.10 மணியளவில் அவரது உடல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. இதனைத் தொடர்ந்து பிரேத பரிசோதனைக்காக

பக்கம் 02

# பாராளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி ஆர்ப்பாட்டம்

-பாதுகாப்பை உறுதிப்படுத்த வலியுறுத்தல்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

தமது பாதுகாப்பை வலியுறுத்தியும், அரசாங்க தரப்பு எம்.பிக்கள் சிலரின் செயற்பாடுகளை கண்டித்தும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பாராளுமன்ற வளாகத்தில் நேற்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தின் போது எதிர்க்கட்சி உறுப்பினர் மனுஷ நாணயக்காரவுக்கு உரையாற்றுவதற்காக மேலதிக நேரத்தை வழங்காமை தொடர்பில் சபையில்

பக்கம் 02

# பால்மாக்களுக்கு பெரும் தட்டுப்பாடு

க.பிரசன்னா

நாட்டில் தற்போது இறக்குமதி செய்யப்படும் பால் மா மற்றும் உள்ளூர் உற்பத்தி பால் மாக்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் பால் பக்கெட்டுக்களுக்கான கேள்வியும் அதிகரித்துள்ளது.

பால் மா இறக்குமதி செய்வதற்கு டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதனால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு பால் மா நிறுவனங்களிடம் இருந்து முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவுக்கான கொடுப்பனவுகளை செலுத்தாத காரணத்தினால் புதிய பால் மா தொகுதிகளை அனுப்புவதில்லை எனவும் பால் மா இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பக்கம் 02

# நாட்டில் ஒமிக்ரான் அலை உருவாகும் நிலை

சுகாதார தொழில் வல்லுநர் சங்கத்தின் தலைவர்

க.பிரசன்னா




விமான நிலையத்தில் ஒழுங்கற்ற முறையில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனை செயல்முறையின் விளைவாக நாட்டில் ஒமிக்ரான் கொவிட் அலை உருவாகும் நிலை காணப்படுவதாக சுகாதார தொழில் வல்லுநர் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

விமான நிலையத்துக்கு வரும் பயணிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

பக்கம் 02



## பிரியந்த ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் சியல்கொட் நகரிலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றில் கும்பலொன்றினால் பிரியந்த குமார கொலை செய்யப்பட்டிருந்தார்.

இதனை தொடர்ந்து அவரின் மரணப் பரிசோதனையின் பின்னர் உடலை இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதன்படி இலங்கை அரச செலவில் உடல் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதேவேளை பிரியந்த குமாரவின் உடல் வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனையின் பின்னர் கணேமுல்லையில் உள்ள அவரின் வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியை நடத்தப்படவுள்ளது.

## விவாதத்தை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சுக்கள் பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு. மற்றும் பிரசன்ன ரணதுங்கவின் சுற்றுலாத்துறை அமைச்சு , இந்திக்க அனுருத்தவின் கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்கஅமைச்சு, நாலக கொடஹேவாவின் நகர அபிவிருத்தி கழிவுப்பொருட்களை அகற்றுதல் மற்றும் சமுதாய துப்புரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு,ஜீவன் தொண்டமானின் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சு ,மொஹான் த சில்வாவின் கரையோர பாதுகாப்பு மற்றும் தாழ் நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு,வி டி.வீ.சானக்கவின் விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதம் இடம்பெற விருந்தது.

எனினும் பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் எதிர்க்கட்சி -அரச தரப்பினர்களுக்கிடையில் இடம்பெற்ற முரண்பாடுகளை காரணம் காட்டியும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. மனுஷ நாணயக்காரவை அரச தரப்பினர் தாக்க முற்பட்டதாக குற்றம் சட்டியும் தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை சபை அமர்வுகளில் பங்கேற்க மாட்டோம் என கடந்த சனிக்கிழமை சபையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவுமான லக்ஷ்மன் கிரியெல்லாவினால் அறிவிக்கப்பட்டு சபை அமர்விலிருந்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. க்கள் வெளியேறிச் சென்றனர்.

**அரசு -எதிர்கட்சி முறுகல் தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டம்**

இந்நிலையில் பிரதான எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டு, வெளிநடப்பு, பாதுகாப்பு உத்தரவாதம் கோரல் மற்றும் அரச தரப்பின் குற்றச்சாட்டுகள் தொடர்பில் நேற்று திங்கட்கிழமை காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் கட்சித்தலைவர்கள் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் அரச எதிர்க்கட்சிகளுக்கிடையில் கடும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்ற நிலையில் பாராளுமன்றத்தில் கடந்த வார இறுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கையை பெற்றுக்கொள்வதற்காக அரச. எதிர்க்கட்சிகளை சேர்ந்த சிரேஷ்ட உறுப்பினர்களை கொண்ட குழுவொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக சபாநாயகரால் கூறப்பட்டு அது பாராளுமன்றம் கூடிய பின்னர் சபையில் சபாநாயகரால் அறிவிக்கவும் பட்டது.

**10 ரூபாவால் நடத்த முடியாது போன விவாதம்**

வரவு – செலவுத்திட்ட விவாத சம்பிரதாயப்படி அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தை பிரதான எதிர்க்கட்சியின் சிரேஷ்ட எம்.பி. அல்லது பிரதான எதிர்கட்சியினால் பெயர் குறிப்பிடப்படும் இன்னுமொரு எதிர்க்கட்சி சிரேஷ்ட எம்.பி.யே குறிப்பிட்ட அமைச்சுக்கள் இராஜாங்க அமைச்சுக்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவற்றிலிருந்து 10 ரூபாவை வெட்டி விடுவதாகக்கூறி விவாதத்தை ஆரம்பித்து வைக்க வேண்டும். இதற்கமைய நேற்றைய விவாதத்தை ஜே .வி.பி. யின் விஜித ஹேரத் எம்.பி.யே ஆரம்பித்து வைப்பதாக ஏற்கனவே பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

**சபைக்கு வந்து பின்னர் வெளியேறிய தலைவர்கள்**

இவ்வாறான நிலையில் பிரதான எதிர்க்கட்சி எம்.பி. க்கள் இன்றி சபை கூடிய நிலையில் சபையில் ஜே .வி.பி. தலைவரும் எம்.பி.யுமான அநுர குமார திசாநாயக்க , விஜித ஹேரத் எம்.பி. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் அமர்ந்திருந்தனர். இதன்போது வெள்ளி,சனிக்கிழமைகளில் சபையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் அநுர குமார திசாநாயக்க,கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் விசேட கூற்றுக்களை முன்வைத்து விட்டு சபையிலிருந்து வெளியேறிச்சென்றனர்.

இதன்பின்னர் இரு அமைச்சுக்கள் 5இராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தை ஆரம்பித்து வைக்க முயன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன விவாதத்தை ஆரம்பித்து வைக்க விஜித ஹேரத் எம்.பி.யின் பெயரை அழைத்தபோது அவர் சபையில் இருக்காததால் சம்பிரதாய முறைப்படி 10 ரூபாவை வெட்டி விவாதத்தை ஆரம்பித்து வைக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. இதற்கிடையில் இவ்வாறான நிலைமை ஏற்படப் போவதை முற் கூட்டியே அறிந்து கொண்ட சபாநாயகர் பாராளுமன்ற செயலாளருடன் கலந்துரையாடியிருந்ததால் அவரின் ஆலோசனைப்படி குறிப்பிட்ட அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்களை சபையின் அனுமதிக்கு சமர்ப்பிப்பதாக அறிவித்தார்.

இதனையடுத்து அரச தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அமைச்சுக்கள்,இராஜாங்க அமைச்சுக்களுக்கான திருத்தங்களை முன்வைத்தார். இதனையடுத்து தனது அமைச்சு தொடர்பான தெளிவுபடுத்தலை பிரதமரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான மஹிந்த ராஜபக்ச முன்வைப்பார் என சபாநாயகர் அறிவித்ததையடுத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ச உரை நிகழ்த்தினார். இதனைப்போன்றே விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க,இராஜாங்க அமைச்சர்களான இந்திக்க அனுருத்த, நாலக கொடஹேவா,ஜீவன் தொண்டமான், மொஹான் த சில்வா, வி டி.வீ.சானக்க ஆகியோரும் உரையாற்றினர்.

## வழமைபோல் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைநிறுத்தப்பட்டிருந்த சமையல் எரிவாயு விநியோகம் நேற்று முதல் மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளது.

புதிய லிட்ரோ எரிவாயு சிலிண்டரை அடையாளம் காண்பதற்காக சிலிண்டரில் வெள்ளை நிற பின்னணியில் சிவப்பு நிறத்திலான லிட்ரோ நிறுவனத்தின் இலட்சினை கொண்ட பொலித்தீன் சீல் வைக்கப்பட்டுள்ளது. புதிய லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டரில் மஞ்சள் நிறப் பின்னணியில் நீல நிற இலட்சினைக் கொண்ட பொலித்தீன் சீல் வைக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

முன்னதாக சந்தையில் கிடைக்கும் எரிவாயு சிலிண்டர்களில் எதேய்ல் மெர்கெப்டன் எனும் வேதிப்பொருள் உரிய அளவு சேர்க்கப்படும் வரை எரிவாயு விநியோகத்தை நிறுத்துமாறு எரிவாயு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. எரிவாயுவில் நிர்ணயிக்கப்பட்ட தரநிலையின்படி எதேய்ல் மெர்கெப்டன் என்ற வேதிப்பொருள் 14 அலகுகளில் இருக்க வேண்டும். ஆனால், சமீபத்தில் விநியோகிக்கப்பட்ட எரிவாயு சிலிண்டர்களில் 5 அலகுகளே இருப்பது உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை முன்வைத்த நிபந்தனைகளின் அடிப்படையில் எரிவாயுவினை விநியோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் எரிவாயு நிறுவனங்கள் அவற்றை நிராகரித்திருந்தன. பின்னர் நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ணவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளையடுத்து எரிவாயுவினை மீண்டும் சந்தைக்கு வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. தற்போது ஏற்கனவே இறக்குமதி செய்த எரிவாயுவை விநியோகிக்காமல் இருப்பதுடன் புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயுவினை விநியோகிப்பதற்கு முன்னர் உரிய தரத்துக்கு அமைய வாசத்தை உணர்ந்து கொள்வதற்கு எதேய்ல் மெர்கெப்டன் இரசாயனத்தை சேர்ப்பது அவசியமென பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை முன்வைத்துள்ள நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

100 சமையல் எரிவாயு சிலிண்டர்களில் ஒரு சிலிண்டரை பரிசோதித்து அதற்கான தொடரிலக்கத்தை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு அனுப்ப வேண்டும் எனவும் இந்நிபந்தனைகளை பூரணப்படுத்தி தரத்தை ஆரய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக எரிவாயுவினை விநியோகிக்க வேண்டும். அத்துடன் எரிவாயு உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்தி செயற்பாடுகள் தொடர்பில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த குழுவினூடாக விசாரணைகளை மேற்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியைச் சேர்ந்த 26 வயதான விஜயகுமாரன் தர்சன், வவுனியா - மதவுவைச்சகுளத்தினை சேர்ந்த 26 வயதான சிவலிங்கம் சகிலன் ஆகியோரே கடலில் காணாமல் போயுள்ள நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டவர்களாவர்.

இவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு மாவட்ட மருத்துவனையில் வைக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் இரவிரவாக முல்லைத்தீவு கடற்தொழிலாளர்கள் கரையோரபகுதிகளில் ஒளிபாய்ச்சி காணாமல் போனவர்களை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வண்ணாங்குளம் கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க கடற்தொழிலாளர்களின் 5 படகுகள் நேற்று காலை கடலில் இறங்கி தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை இளைஞர்கள் நீரில் மூழ்கிய இடத்தில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் தீர்த்தக்கரை கடற்கரையில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

அதன் பின்னர் தொடர்ச்சியாக கடலில் தேடுதல் நடத்தியபோது சம்பவம் நடைபெற்ற பகுதியில் இருந்து 6 கிலோமீற்றர் தொலைவில் உள்ள அளம்பில் பகுதியில் மீனவர் ஒருவரின் கரைவலையில் சிக்கிய நிலையில் மூன்றாவது இளைஞனின் சடலமும் மீட்கப்பட்டது. இளைஞர்களின் சடலங்கள் மீனவர்களின் படகில் முல்லைத்தீவு கடற்கரைக்கு கொண்டுவரப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன.

மூன்று இளைஞர்களின் உயிரிழப்பு தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டுவருவதுடன் மரண விசாரணைகளின் பின்னர் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

(ச-15)

## முன்னாள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வருடம் இடம்பெற்ற மாவீரர் தினத்தில் வாழை மரத்தில் விளக்கேற்றியது குறித்து சனிக்கிழமை மூன்றரை மணிநேரம் கொழும்பில் இடம்பெற்ற விசாரணைகளின் போது பயங்கரவாத பிரிவினரால் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக முன்னாள் போராளி தெரிவித்துள்ளார்.

வாழை மரத்தில் ஏன் விளக்கு ஏற்றுகின்றீர்கள் என்று தொடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அது எமது பாரம்பரிய கலாசாரத்தின் முறைமை என்றும் நாட்டில் அமுல்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே நாங்கள் போரில் உயிரிழந்தவர்களை நினைவு கூருகின்றோம். மாறாக விடுதலை புலிகளின் தடை செய்யப்பட்ட கொடி போன்ற பொருட்களை எதனையும் நாங்கள் எங்கும் காட்சிப்படுத்தி நினைவு கூரவில்லை . எமது உறவுகளை நினைவு கூருவதற்கு எமக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும் என்று கொழும்பு வரையும் சென்று பல்வேறு அரச தரப்பு பிரதிநிதிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து வலியுறுத்தியிருந்தோம்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ஆணைக்குழு முன் தோன்றி எனது சாட்சியத்தை வழங்கியிருந்தேன். அதற்குப்பின்னர் எம்மை அச்சுறுத்தும் செயற்பாடாகவும், என்னை பயங்கரவாத விசாரணைப்பிரிவிற்கு அழைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொண்டதாகவுமே இதனைக் கருதுகிறேன்.

இவ்வாறான விசாரணைகள் முன்னாள் போராளிகள், தமிழ் மக்கள் மீது சுமத்தப்படும் போது நாட்டைவிட்டு வெளியேறக்கூடிய ஒரு நிர்ப்பந்தத்திற்குள் நாங்கள் தள்ளப்பட்டு கொண்டிருக்கிறோம்.

இச் செயற்பாட்டினால் எமது நாட்டிற்கும் எமது ஜனநாயகத்திற்குமான எமது குரல்கள் வாய்களை மூடக்கூடிய ஒரு விடங்களை இவர்கள் கையாள்கின்றார்கள் அத்துடன் பயங்கரவாத பிரிவினருக்காக நாங்கள் சில குற்றங்களை ஏற்றுக்கொண்டு செல்ல முடியாது என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

மக்களின் வெளிப்பாடாகவே நாங்கள் இந்த நினைவேந்தல்களை மேற்கொண்டு வருகின்றோம் என்பதையும் எனது விசாரணையின் போது பதிவு செய்திருந்தேன் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

## பால்மாக்களுக்கு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூர் பால் மா விநியோகம் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினை காரணமாக உள்ளூர் பால் மாவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடைகள், பல்பொருள் அங்காடிகளில் பால் மாவுக்கு பற்றாக்குறை காணப்படுவதால் ஒரு பக்கெட் பால் வாங்க, சில கடைகளில், 10 யோகட் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் ஒமிக்ரான் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட பெண் எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனைகள் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவற்றின் பின்னரே மரபணு மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனையின் ஒரு பகுதியாகவே ஒமிக்ரான் தொற்றுடன் ஒரு நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். தொற்றினால் பாதிக்கப்பட்ட நபர் தனிமைப்படுத்தல் நடைமுறைக்கு உட்படுத்தவில்லை. அத்துடன் தெளிவான வழிகாட்டல்கள் இல்லாமையினால் விமான நிலையத்தில் தொற்றுடன் அடையாளம் காணப்படும் நபர் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தெளிவற்ற நிலையில் காணப்படுகின்றது.

இலங்கையில் ஒமிக்ரான் திரிபினால் பாதிக்கப்பட்ட நபர் எவ்வாறு அடையாளம் காணப்பட்டார் என்பது குறித்து சுகாதார அதிகாரிகளும் அரசாங்கமும் கவனம் செலுத்தினால் அவை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய பல நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ஒமிக்ரான் திரிபினால் பாதிக்கப்பட்டவர்களில் 99 வீதமானோர் அத்தகைய செயல்முறைக்கு உட்பட்டவர்கள் அல்ல என்பதுடன் மேலும் அவர்கள் அடையாளம் காணப்படாமல் போகலாம். அவ்வாறாயின் நாடு ஒமிக்ரான் அலையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

## பாராளுமன்ற ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

இதனை தொடர்ந்து சபைக்குள் அமைதியின்மை ஏற்பட்டநிலையில், ஆளும் கட்சி உறுப்பினர்கள் தங்களை தாக்குவதற்கு முயற்சித்ததாக எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.

இது தொடர்பாக மறுநாள் சனிக்கிழமையும் சபையில் சர்ச்சை ஏற்பட்டது. இதன் பின்னர் சபையில் இருந்து வெளிநடப்பு செய்திருந்த ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் பாராளுமன்ற நுழைவாயிலில் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இந்நிலையில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வரையில் சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளாதிருக்க தீர்மானித்த அவர்கள், நேற்றைய தினம் பாராளுமன்றம் கூடியபோது பாராளுமன்றத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் எதிர்க்கட்சி பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல, சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரட்ன, மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், சரத்பொன்சேகா உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர். இவர்கள் அரசாங்கத்தின் உறுப்பினர்களுக்கு எதிராக எழுதப்பட்ட பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியாவாறு இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

## யாழ்ப்பாணத்தில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் எச்சரித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வருகை தருபவர்கள் ஊடாக டெங்கு நோய் வடமாகாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பரவக் கூடிய சூழல் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் நேற்று முதல் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை நுளம்பு ஒழிப்பு வாரமாகப் பிரகடணப்படுத்தப்படுவதாகவும் அவர் கூறினார். (ச)

## இலங்கையின் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பசில் இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்தார்.

இந்த விஜயத்தின் போது இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருந்தது. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் கையொப்பமிடப்பட்ட சில முக்கிய உடன்படிக்கைகள் அமுல்படுத்தப்படவில்லை என இந்தியா குற்றம் சுமத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆங்கில நாளிதழ் ஒன்று இது பற்றிய செய்தி வெளியிட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையில் கையொப்பமிடப்பட்ட இவ்வாறான சில முக்கிய உடன்படிக்கைகள் கைவிடப்பட்டுள்ளதாக இந்தியா அதிருப்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டபாய பதவி ஏற்றுக்கொண்டதன் பின்னர் அமுல்படுத்துவதாக இணங்கப்பட்ட மூன்று முக்கிய உடன்படிக்கைகள் அமுல்படுத்தப்படவில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுகம், யுகதனவி மின் உற்பத்தி நிலைய பங்கு விற்பனை உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் இந்தப் பேச்சுவார்த்தைகளில் கவனம் செலுத்தப்பட்டதாக இராஜதந்திர வட்டாரத் தகவல்களை மேற்கோள்காட்டி ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

## மாற்று ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் வீடமைப்பு அமைச்சு. சுற்றுலாத்துறை அமைச்சு , நகர அபிவிருத்தி கழிவுப்பொருட்களை அகற்றுதல் மற்றும் சமுதாய துப்புரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு,தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சு ,கரையோர பாதுகாப்பு மற்றும் தாழ் நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு,விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதம் நடைபெறவிருந்தது.

இந்நிலையில் பாராளுமன்றத்தில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றைய தினம் சபை நடவடிக்கைகளை புறக்கணித்திருந்தனர். இதனால் விவாதம் நடைபெறவில்லை.

இந்நிலையில் கட்சியின் தலைமை அலுவலகத்தில் கூடிய ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நேற்றைய விவாதத்தில் உரையாற்ற வேண்டிய விடயங்களை, அங்கிருந்து உரையாற்றி தமது உரைகளை சமூக வலைத்தளங்களில் நேரடியாக ஒளிபரப்பினர்.

# மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேசங்களில் 23,803 ஏக்கர் காணிகளை அபகரிக்க முயற்சி

## -முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன்-




முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்கனவே 32,110 ஏக்கர் காணிகளை வனவளத்திணைக்களம் அபகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படும் நிலையில், முல்லைத்தீவு மாவட்ட வனவளத்திணைக்கள அதிகாரி எஸ்.ஜி.சுனில் ரஞ்சித், காடு பேணல் சட்டத்தின் கீழ் முல்லைத்தீவு-துணுக்காய் மற்றும், மாந்தை கிழக்கு பிரதேசங்களில் தம்மால் புதிதாக ஒதுக்கக் காடுகளாக 23,803 ஏக்கர் காணிகள் அடையாளம்காணப்பட்டுள்ளதாகவும், எனவே அவ்வாறு ஒதுக்கக் காடுகளாக அடையாளம் கணப்பட்டுள்ள குறித்த காணிகளை தமக்கு விடுவித்துத் தரவேண்டுமென முல்லைத்தீவு மாவட்டசெயலர் கதிர்காமுத்தம்பி விமலநாதனை எழுத்துமூலம் கோரியுள்ளதாக தெரியவருகின்றது.

எனவே, வனவளத் திணைக்களத்தின் தொடர்ச்சியான இந்த அபகரிப்பு முயற்சிக்கு வன்மையான கண்டனங்களைத் தெரிவிப்பதாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர், முல்லைத்தீவு மாவட்டத்தில் பல திணைக்களங்களின் மூலமாக தமிழ் மக்களுடைய நிலப்பரப்புகள் அபகரிக்கப்படுகின்றன. இந் நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மேலும் 23 ஆயிரத்து 803 ஏக்கர் காணிகளை வனவளத் திணைக்களம் அபகரிக்க முயற்சி மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில், சிராட்டி குளம் பகுதியில் 15 ஆயிரத்து, 688 ஏக்கர் காணியும், நட்டாங்கண்டல் பகுதியில் 678 ஏக்கர் காணிகளையும் வனவளத் திணைக்களம் அபகரிக்க முயற்சிகளை மேற்கொள்வதாகத் தெரிகின்றது.

அதேவேளை துணுக்காய் பிரதேசசெயலகப்பிரிவிற்குட்பட்ட அமைதிபுரம் என்னும் பகுதியில் 2431 ஏக்கர் காணியும், துணுக்காய் பிரதேசசெயலகப்பிரிவிலுள்ள ஏனைய பகுதிகளிலிருந்து 5006 ஏக்கர் காணியும் வனவளத்திணைக்களம் அபகரிக்கவுள்ளதாக தெரிகின்றது.

மேலும் முல்லைத்தீவு மாவட்ட வனவளத்திணைக்கள அதிகாரி எஸ்.ஜி.சுனில் ரஞ்சித், காடுபேணல் சட்டத்தின்கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் தம்மால் புதிதாக ஒதுக்கக் காடுகளாக 23,803 ஏக்கர் காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், எனவே தம்மால் ஒதுக்கக் காடுகளாக அடையாளம் கணப்பட்டுள்ள குறித்த காணிகளை விடுவித்துத் தரவேண்டுமென, முல்லைத்தீவு மாவட்டசெயலர் கதிர்காமுத்தம்பி விமலநாதனை எழுத்துமூலம் கோரியுள்ளதாகவும் எம்மால் அறியமுடிகின்றது.

குறிப்பாக யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்திலே வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி (எல்), தொல்லியல் திணைக்களம், படையினர், இல்மனைற் தொழிற்சாலை அமைப்பதற்காக கொக்கிளாயில் அபகரிக்கப்பட்டுள்ள காணிகள், கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியில் எமது தமிழ் மக்களின் காணிகளை பெரும்பான்மை இனத்தவர்கள் அபகரித்துள்ளமை, பௌத்தபிக்குகள் தொல்லியல் திணைக்களத்தோடு இணைந்து அபகரித்துள்ள காணிகள், மணலாறு என்னும் பிரதேசசெயலகப்பிரிவு உருவாக்கப்பட்டு அதனூடாக அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் என, முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு இலட்சம் ஏக்கருக்கு மேல் அபகரிக்கப்பட்டுள்ளன என்றார்.(56) படம்-01

# புனரமைக்கப்பட்ட ஆரியகுளத்தை பார்வையிடுவதில் மக்கள் ஆர்வம்



ஈழத் தமிழர்களின் மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாக விளங்கும் பழம்பெரும் ஆரியகுளம் புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த குளத்தைப் பார்வையிடுவதில் பொதுமக்கள் அதிக ஆர்வம் செலுத்துவதை அவதானிக்க முடிகின்றது.

தூய நகரம் திட்டத்திற்கு அமைவாக புனரமைக்கப்பட்ட ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை முதல் மக்கள் பயன்பாட்டுக்கு வந்தது.

இந்நிலையில் ஆரியகுளத்தின் அழகைக் காணவும், அங்கு நடைபெறும் வேடிக்கை நிகழ்வுகளைக் கண்டு களிக்க தினமும் பொதுமக்கள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

குறிப்பாக விடுமுறை நாளான நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வேளையில் குடும்பம் குடும்பமாக ஏராளமானோர் தமது குழந்தைகள், சிறுவர்களை அழைத்துக் கொண்டு ஆரியகுளத்திற்கு வருகை தந்திருந்தனர்.

இதேவேளை, ஆரியகுளத்தைப் பார்வையிடப் பொதுமக்கள் தினமும் வருகை தருவதால் ஆரியகுளம் பகுதிச் சூழலில் புதிதாகப் பல நடமாடும் விற்பனை நிலையங்கள் உருவாகியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (18)

## -அமைச்சுக்களின் செயலாளர்கள்-

# புலிகளின் தங்கம் தோண்ட முற்பட்ட இடத்தில் எதுவும் கிடைக்கவில்லை



அமைச்சுக்களின் செயலாளர்களால் புலிகளின் தங்கம் தோண்ட முற்பட்ட இடத்தில் எதுவும் கிடைக்காததால் அகழ்வுப் பணி நேற்றுடன் நிறைவு வந்தது ஏற்கனவே அந்த இடத்தில் அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா உத்தரவிட்டுள்ளார்.

இறுதி யுத்த காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் புதைத்து வைக்கப்பட்ட தங்கத்தை தோண்டி எடுக்க முயற்சித்ததாக இரண்டு பிரதான அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் அந்தத் தங்கம் இருப்பதாக தெரிவிக்கப்பட்ட இடமான முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் அகழ்வு நடவடிக்கை முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் கடந்த 2 ஆம் திகதி பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டது .

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் புதைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் தங்கத்தை நீதிமன்றின் உத்தரவிற்கு அமைய தோண்டி எடுப்பதற்கு முன்னதாக அமைச்சுக்களின் செயலாளர்கள் இருவர் இரகசியமாக தோண்டி எடுக்க முயற்சித்துள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகிய நிலையில் இந்த சம்பவம் தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்த நிலையிலேயே அகழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன

இருப்பினும் அன்றைய தினம், அண்மைய நாட்களாக பெய்த கனமழை காரணமாக அந்தப் பகுதிக்கு கனரக இயந்திரங்களை கொண்டு செல்ல முடியாத நிலையில் அகழ்வுப் பணி மறுநாளுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மறுநாள் நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் ஆரம்பமாகி அகழ்வுப்பணி இடம் பெற்றது.

இந்நிலையில் குழிகளுக்குள் வெள்ளநீர் தேங்கி அதனை அகற்ற முடியாத நிலை உருவானதாலும் கனரக இயந்திரம் நிலத்தினில் புதையுண்டதாலும் அகழ்வுப்பணிகள் பாதியில் இடைநிறுத்தப்பட்டதோடு மீண்டும் அகழ்வுப் பணி நேற்று திங்கட்கிழமை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது

இதற்கமைய நேற்றைய தினம் அகழ்வு பணிகள் நீதிபதி சரவணராஜா முன்னிலையில் ஆரம்பமாகி இடம்பெற்றது.

இதன்போது அந்த இடத்தில் தங்க நகைகள் ஏதும் கிடைக்கவில்லை அங்கு கிடைத்த தகரத்துண்டு, உரப்பை, கயிறு போன்ற பொருட்களை நீதிமன்றில் பாரப்படுத்துமாறும் அகழ்வுப்பணிக்கு முன்னர் அந்த இடத்தில் அகழ்வு செய்தவர்கள் தொடர்பில் விசாரித்து அறிக்கையிடுமாறு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்ட முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா இது தொடர்பான வழக்கு விசாரணைகள் 2022-01-25 அன்று இடம்பெறும் எனவும் அறிவித்தார்.

# ஒமிக்ரோன் வைரஸ் திரிபின் பரவலை தடுப்பதற்கு தடுப்பூசி முக்கியமாகும்

## -சுகாதார அமைச்சின் தொழிநுட்ப சேவைகள் பணிப்பாளர்-

ஒமிக்ரான் வைரஸ் திரிபின் பரவலை தடுப்பதற்கு தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம் முக்கியமானதாகுமெனவும் கொவிட் தொற்றுக்கு எதிராக தடுப்பூசியினை பெற்றுக்கொள்வதானது தனி நபர்களை பாதுகாப்பதுடன் தொற்று பரவாமல் தடுப்பதாகவும் சுகாதார அமைச்சின் தொழிநுட்ப சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

வயது வரம்புகளை பொருட்படுத்தாமல் எந்தவொரு நபரும் கொவிட் திரிபினால் பாதிக்கப்படும் நிலை காணப்படுகின்றது. ஒவ்வொரு மாறுபாடும் அனைத்து நபர்களுக்கும் அச்சுறுத்தலாக காணப்படுகின்றது.

தற்போது அனைத்து அபிவிருத்தியடைந்த நாடுகளும் கொவிட் தடுப்பூசி வழங்கும் செயல்முறையை விரிவுபடுத்தியுள்ளன. தடுப்பூசிகளுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டால் புதிய திரிபுகளுக்கு எதிராக வெற்றிகரமாக போராட முடியும். தடுப்பூசியினை பெற்றுக்கொள்வதானது ஒருவருக்கு தொற்று ஏற்படாதென்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. ஆனால் அவை சிக்கல்கள் மற்றும் மரணங்களை தடுக்கின்றது. ஒமிக்ரான் திரிபை கட்டுப்படுத்துவதில் தடுப்பூசிகள் முக்கியமானது. கொவிட் தொற்றுக்கு எதிராக தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வது தனிமனிதர்களை மட்டுமல்லாது தொற்று பரவுவதையும் தடுக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

# உணவகத்துக்கு போக பாதுகாப்புள்ளது சபைக்கு வரத்தான் பாதுகாப்பில்லையா

## -இராஜாங்க அமைச்சர்கள் கேள்வி-

(பா. கிருபாகரன் - ந.ஜெயகாந்தன்)

எதிர்க்கட்சியினருக்கு பாராளுமன்ற உணவகத்துக்கு போக பாதுகாப்புள்ளது. சபைக்கு வர மட்டும்தான் பாதுகாப்பில்லையா என இராஜாங்க அமைச்சர்கள் கேள்வி எழுப்பினர்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு. சுற்றுலாத்துறை அமைச்சு, கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதம் நடைபெறவிருந்தது.

எனினும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் தமக்கெதிராக இடம்பெற்ற தாக்குதல் முயற்சிகளை சுட்டிக்காட்டி தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே சபை அமர்வுகளில் பங்கேற்போம் எனக்கூறி நேற்றைய சபை அமர்வை புறக்கணித்தனர்.

இராஜாங்க அமைச்சுக்கள் மீதான விவாதத்தை நடத்த முடியாத நிலைமை அரசுக்கு ஏற்பட்டது.

இதன்போது எதிர்க்கட்சியினரின் இந்த புறக்கணிப்பு நடவடிக்கையை கடுமையாக விமர்சித்த இராஜாங்க அமைச்சர்களான இந்திக்க அநுருத்த, சி.மொஹான் த்சில்வா, சானக்க ஆகியோர் கூறுகையில்,

இன்று (நேற்று) முக்கியமாக வீடமைப்பு அமைச்சு மீதான விவாதம் இடம்பெறவிருந்தது. இந்த அமைச்சின் முன்னாள் அமைச்சராக தற்போதைய எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸாவே இருந்தார். அவரின் அமைச்சில் நடந்த ஊழல்கள், மோசடிகளை இன்று வெளியிட நாம் தயாராகவிருந்தோம். அதற்கான சவாலையும் நாம் அவருக்கு விடுத்திருந்தோம் . இதிலிருந்து தப்பிக்கவே அவர்கள் இந்த நாடகத்தை நடத்துகின்றனர். பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் உள்ள எதிர்க்கட்சியினர் பாராளுமன்ற உணவகத்துக்கு தைரியமாக செல்கின்றனர். உண்கின்றனர். ஆனால் சபைக்கு வர மாட்டோம் என்கின்றனர். எதிர்க்கட்சியினருக்கு பாராளுமன்ற உணவகத்துக்கு போக பாதுகாப்புள்ளது. சபைக்கு வர மட்டும்தான் பாதுகாப்பில்லையா? இதிலிருந்தே இவர்களின் நாடகத்தை புரிந்து கொள்ள முடியும் என்றனர்.

## -க.பொ.த. உயர்தரத்தில் கலைத்துறையை-

# தெரிவு செய்யும் மாணவர்களுக்கு தமிழ் கட்டாயமாக்கப்பட வேண்டும்



க.பொ.த உயர்தரத்தில் கலைத்துறையை தெரிவு செய்யும் மாணவர்களுக்கு, தமிழ் பாடம் கட்டாயமாக்கப்படல் வேண்டும் என உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத் தலைவர் பி.தர்மகுமாரான் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண செயலாளர், கல்வி கலாசார அலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சிற்கு வழங்கப்பட்ட மகஜரிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

க.பொ.த உயர்தரத்தில் கலைத்துறையை தெரிவு செய்யும் மாணவர்களில் பலர் தமிழ் பாடத்தை தவிர்க்கின்றனர். இதற்கு பாடசாலை நிர்வாகமும் ஒப்புதல் வழங்குகின்றது. ஏனெனில் தமிழ் பாடத்தில் சிறந்த பெறுபேற்றினை பெறமுடியாதுள்ளது. என்பது அண்மைக் கால ஐதிகமாகியுள்ளது.

இதைமாற்றியமைத்து தமிழ் பாடத்தை முதன்மைப்படுத்தி ஏனைய இரண்டு பாடங்களையும் பல்கலைகழகங்களுக்கு ஏற்ற வகையிலும், வெட்டுப்புள்ளிகளுக்கு ஏற்ற வகையிலும் விரும்பிய தொழில்துறைக்குரிய வகையிலும் பாடத்தெரிவு செய்ய ஊக்குவிக்க வேண்டும். கலைத்துறையில் தமிழ் பாடத்தெரிவை புறக்கணிப்பதால் எதிர்காலத்தில் மாணவர்களுக்கு பின்வரும் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு.

தமிழ் பாடத்தை உயர்தரத்தில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை ஏற்படுவதுடன் தகுதியான ஆசிரியர்களை நியமிக்க முடியாது போகலாம்.

கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆரம்பபிரிவு பாடத்திற்கு தெரிவாக முடியாத சூழல் உருவாகும். உயர்தர சித்தியுடன் தமிழ்பாட ஆசிரியர் நியமனம். ஆரம்பபாட ஆசிரியர் நியமனம் பெற்றுக்கொள்ள முடியாது.

நமது தாய்த்தமிழை புறக்கணிப்பதுக்கு நாமே காரணமாவதுடன் தமிழ் துறை பின்னோக்கி செல்லும் அபாயம் காணப்படுகின்றது. இதைக்கருத்தில் கொண்டு தமிழையும் தமிழ் மொழியையும் உயிராக வளர்க்க நடவடிக்கை எடுக்க தயவாக கேட்டுக் கொள்கிறேன் என்றுள்ளது.

# நில அபகரிப்பின் தாக்கத்தை பேசிய “நிலம்" குறும்படம் இந்தியாவில் விருதினை வென்றது






ஈழத்தமிழத் தேசத்தில் எமது நிலம் எமக்கு வேண்டும் என நில அபகரிப்புக்கு எதிரான குரல்கள் தொடர்ச்சியாக ஒலித்து வரும் நிலையில், அபகரிப்புக்குள்ளான சொந்த நிலத்தின் ஏக்கத்தை பேசுபொருளாக கொண்ட நிலம் குறும்படம் சிறந்த திரைப்படத்துக்கான விருதினை வென்றுள்ளது.

தமிழ்நாட்டின் நீலகிரி பிலிம் கிளப் மற்றும் பி.சி டி.வி- நெட்வொர்க் அமைப்புகள் நடத்துகின்ற ஊட்டி குறும்பட விழாவிலேயே 2021 ஆம் ஆண்டின் சிறந்த குறும்படத்துக்கான விருதினை வென்றுள்ளது.

ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள தமிழர் தேசத்தில் இவ்வாறான பேசுபொருளைக் கொண்ட கதையொன்றினை படமாக்குவது என்பது பெரும் சவாலாக இருந்துள்ளதோடு, கிடைக்கக்கூடிய வெளியில் நுட்பமாக படமாக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

32 நாடுகளைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட குறும்படங்கள் பங்கெடுத்திருந்த ஊட்டி குறும்பட விழாவில் சிறந்த படத்துக்கான விருதினை பெற்றுள்ளது.

புலம்பெயர் தமிழர்களிடையே பிரசித்தி பெற்ற படலைக்கு படலை தொலைக்காட்சி தொடரின் இயக்குனரும், சமூக-அரசியல் செயற்பாட்டாளருமாகிய ஊடகர் சுதன்ராஜ் இக்குறும்படத்தினை தயாரித்து எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
செவ்வாய்க்கிழமை 07 டிசம்பர் 2021 Tuesday 07th December 2021

## தடுப்பூசிகளின் அளவை அதிகரிப்பதே தற்போதுள்ள தெரிவாக அமையக்கூடும்

கொரோனா வைரஸுடன் வாழ வேண்டும் என்ற எண்ணத்திற்கு பழகிக்கொண்டிருக்கும் போதே, அதன் பிந்தியதும் மிகவும் வீரியம் மிக்கதுமான உருத்திரிபான ஒமிக்ரோன் பற்றிய செய்திகள் உலகம் முழுவதும் பரவிவருகிறது. இலங்கையில் புதிய உருத்திரிபு தொற்றுடைய ஒருவர் மட்டுமே இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளபோதும், அந்த வைரஸ் திரிபு நாட்டில் பரவாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்ற பரவலான கவலை காணப்படுகிறது. தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்டதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்திருந்த ஒமிக்ரோன் உருத்திரிபு ஸ்பைக் புரதத்தில் குறைந்தது 30 பிறழ்வுகளைக் கொண்டுள்ளதாகவும் இது ஸ்பைக் புரதத்தை மாற்றும் மற்றும் தடுப்பூசி மூலம் கொடுக்கப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தியைத் தவிர்க்கும் தன்மை கொண்டதெனவும் மருத்துவ நிபுணர்களில் ஒருசாரார் கூறுகின்றனர் . இந்த புதிய உருத்திரிபு ஏற்கனவே இயக்கங்களை கட்டுப்படுத்தியுள்ளது .ஸ்பைக் புரதத்திற்கு எதிராக பிறபொருளெதிரிகளை உருவாக்குவதன் மூலம் பல தடுப்பூசிகள் செயற்படுவதால், ஸ்பைக் புரதத்தில் ஏற்படும் மாற்றம் பல தடுப்பூசிகளை திறனற்றதாக மாற்றலாம் அல்லது விரைவில் ஆற்றலை இழக்கச்செய்யலாமெனவும் கூட கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

வைரஸ் திரிபு இவ்வளவு குறுகிய காலத்தில் மிகவும் முன்னேறியதால், விஞ்ஞானிகள் புதிய உருத்திரிபு மிகவும் பரவக்கூடியதெனவும் தடுப்பூசிகளின் செயல்திறனை பாதிக்கலாம் என்றும் நம்புகின்றனர். இருப்பினும் வேறு பல ஊகங்களும் காணப்படுகின்றன .இதுவரை வெளியாகியுள்ள விஞ்ஞானபூர்வ ஆதாரங்களின் அடிப்படையில், கிடைக்கக்கூடிய கொவிட் தடுப்பூசிகள் புதிய உருத்திரிபிற்கு எதிராக செயற்படாமல் போக வாய்ப்புள்ளது. இருப்பினும், புதிய திரிபு பற்றிய மேலதிக தகவல்களை காலம் மட்டுமே சொல்லும். உண்மையில், இந்த உருத்திரிபானது , தடுப்பூசியால் தூண்டப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தியைத் தவிர்த்து, அதன் செயற்றிறனைக் குறைவாக வழங்க முடிந்தால், நிபுணர்கள் ஏற்கனவே உள்ள தடுப்பூசிகளைப் புதுப்பிக்க அல்லது அவற்றை மாற்றியமைக்க பரிந்துரைக்கின்றனர். அதேவேளை மொடெர்னா ஒமிக்ரோன் உருத்திரிபிற்கான தடுப்பூசி அடுத்தவருட ஆரம்பத்தில் தயாராக இருக்கும் என்று சமீபத்தில் அறிவித்துள்ளமை சிறிது ஆறுதலளிக்கும் விடயமாகும்.

உலக சுகாதார அமைப்பால் 'கவலையின் உருத்திரிபு 'என துரிதமாக முத்திரை குத்தப்பட்ட ஒமிக்ரோன் இதுவரை பல நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது. வெளிநாட்டிலிருந்து வரும் அனைவரையும் பரிசோதிப்பது, ஒமிக்ரோன் தொடர்புகளை தனிமைப்படுத்துவது, பொது இடங்களில் கட்டாயம் முகக்கவசம் அணிவதை தொடர்ந்து கடைப்பிடிப்பதே பெரும்பாலும் சகலரும் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள். ஆட்கள் யாவரும் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். இரண்டு டோஸ் தடுப்பூசிகளுக்குப் பிறகும், கொவிட் -19 க்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவர்களாக ஆட்கள் இல்லை என்பதையே புதிய உருத்திரிபு காண்பிக்கிறது. ஒரு வைரஸ் பரவுவதில் தீவிரமாக இருந்தால், அது நழுவிச்சென்றுவிடும் .அது எங்கும் பரவ வாய்ப்புள்ளது. கொவிட்-19 இன் தொற்றுகள் அக்டோபரில் குறைவடைய ஆரம்பித்தது.வைரஸ் மீது ஸ்பைக் புரதத்தைத் தாக்க ,உடலைப் பயிற்றுவிக்க வெவ்வேறு மருந்து நிறுவனங்களால் தடுப்பூசிகள் பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான தடுப்பூசிகள், மனித உயிரணுக்களில் ஒட்டிக்கொண்டிருக்கும் வைரஸின் ஸ்பைக் புரதத்தை நடுநிலையாக்கும் பிறபொருளெதிரிகளை உருவாக்க உடலுக்கு 'கற்பிப்பதில்' கவனம் செலுத்துகின்றன. ஆனால் பல புதிய திரிபுகளின் பிறழ்வுகள் ஸ்பைக் புரதத்தின் பகுதிகளில் உள்ளன. அவை பிறபொருளெதிரிகளை அங்கீகரிக்கின்றன. இது தடுப்பூசியின் செயல்திறனை பாதிக்கலாம் என்ற கவலையும் நிபுணர்களின் ஒருசாராரால் எழுப்பப்படுகிறது.

ஒமிக்ரோன் பரவலைத் தடுக்க , அமெரிக்கா, பிரேசில், கனடா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், அவுஸ்திரேலியா, ஜப்பான், தென் கொரியா மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட பல நாடுகள், தடைகள் அல்லது பயணக் கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளன. இலங்கையும் சில நாடுகளுக்கு தடைகளை அறிவித்திருந்தது. உலகெங்கிலும் தடுப்பூசி விநியோகத்தில் பாரிய ஏற்றத்தாழ்வுகள் குறித்தும் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன .அபிவிருத்தியடைந்த நாடுகள் பல மூன்றாம் டோஸ் பூஸ்டர்களை வழங்கினாலும், குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் 7 சதவீதத்திற்கும் குறைவான மக்களுக்கே முதலாவது டோஸ் கிடைத்துள்ளதாக மருத்துவ மற்றும் மனித உரிமைகள் குழுக்கள் தெரிவிக்கின்றன. புதிய உருத்திரிபுகள் , தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட பின்னர்,பல நாடுகளில் கண்டறியப்படுகின்றன. தற்போதுள்ள தடுப்பூசிகள் வேலை செய்யுமா என்பதே இப்போதுள்ள பெரிய கேள்வி ? விஞ்ஞானிகள் பிறழ்வுகளின் எண்ணிக்கையால் கவலைப்படுகிறார்கள். அவற்றில் சில ஏற்கனவே இருக்கும் நோயெதிர்ப்பு பாதுகாப்பைத் தவிர்க்கும் திறனுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவை கோட்பாட்டுரீதியான கணிப்பீடுகள் என்றாலும், பிறபொருளெதிரிகள் புதிய உருத்திரிபை எவ்வாறு நடுநிலையாக்குகின்றன என்பதை சோதிக்க ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. தற்போதுள்ள தடுப்பூசிகள் குறைவான பாதுகாப்பைக் கொடுக்குமென கூறப்படுவதால் ஆபத்தில் உள்ள குழுக்களுக்கு பூஸ்டர் டோஸ்கள் உட்பட தடுப்பூசி அளவை அதிகரிப்பதே தற்போதுள்ள முக்கியமான தெரிவாகத் தோன்றுகிறது.

# 'குடும்பப் பெண்ணொருவரின் காலில் நேரம் குறித்த குண்டை கட்டுவது போன்றது'

*** எண்ணெய் மற்றும் எரிவாயுத் துறை நிபுணர் நிமால் டி சில்வா இலங்கையில் சமையல் வாயு சிலிண்டர் வெடிப்பு விவகாரம் குறித்து கணிப்பிடுகிறார்**

பொதுவாக எல்.பி.ஜி. யென அழைக்கப்படும் திரவமாக்கப்பட்ட பெற்றோலிய வாயு, உணவு தயாரிப்பதற்காக ஒவ்வொரு வீட்டிலும் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் இது வொரு அத்தியாவசியப் பொருளாகக் கருதப்படுகிறது. எவ்வாறாயினும் 2021 ஏப்ரலில் , நாட்டின் எல்.பி.ஜி. சந்தையில் அரசுக்குச் சொந்தமான நிறுவனமான லிட்ரோ காஸ் லங்கா , புதிய 18 – லீற்றர் எரிவாயு சிலிண்டரை அறிமுகப்படுத்திய போது, நுகர்வோர் விவகார அதிகாரசபை நிறுவனம் அதன் கலவையை மாற்றுவது குறித்து கவலைகளை எழுப்பியிருந்தது . எரிவாயு 50:50 பியூட்டேன்:புரோப்பேன் விகிதம், வழக்கமான 70:30 இலிருந்து இந்த மாற்றத்தைப் பற்றிய கவலைகள், இந்த மாற்றப்பட்ட கலவை சிலிண்டர்களின் உள் அழுத்தத்தை பாதிக்க வழிவகுக்கும். இதனால் வாயு கசிவுகள் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. பின்னர் சந்தையில் இருந்து சர்ச்சைக்குரிய தயாரிப்பை லிட்ரோ திரும்பப் பெற்றது.

துரதிர்ஷ்டவசமாக, பிரச்சினை முடிவுற்றதாக நிரூபிக்கப்படவில்லை. கடந்த மாதம், அசாதாரணமான எண்ணிக்கையில் எல்.பி.ஜி. தொடர்பான வெடிப்புகள் பதிவாகியுள்ளன. சில நாட்களில் இதுபோன்ற 30 க்கும் மேற்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன. லிட்ரோ மற்றும் லாப்ஸ் காஸ் பி.எல்.சி. ஆகியஇரண்டு நிறுவனங்களும் தங்கள் சிலிண்டர்கள் அல்லது எரிவாயு கலவையில் ஏதேனும் சிக்கல்களுடன் தொடர்புடையவை என்ற தெரிவிக்கப்படுவதை மறுத்தாலும், சம்பவங்களுக்கான காரணம் பற்றிய கேள்விகளுக்கு பதிலளிக்கப்படவில்லை.

கடந்த வாரம், வர்த்தகம் தொடர்பான பாராளுமன்ற ஆலோசனைக் குழு, தொழில்துறை நிபுணர்களுடன் அவசரமாகக் கூட்டமொன்றை நடத்தியது. அவர்களில், கடலோர எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வு, எண்ணெய் மற்றும் எரிவாயு பரிமாற்றக் குழாய்கள், பெற்றோ கெமிக்கல் உலைகள் , கடலோர காற்றாலை என்பனவற்றில் 45 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டவரான நிமால் டி சில்வாவும் கலந்துகொண்டிருந்தார் .20 க்கும் மேற்பட்ட நாடுகளில் பணியாற்றிய டி சில்வா, உள்நாட்டு சந்தை மற்றும் அது பின்பற்றும் பாதுகாப்பு தரநிலைகள் குறித்து அதிகளவுக்கு விமர்சித்துள்ளார்.இலங்கையில் நடந்த அண்மைய சம்பவங்கள் குறித்த அவரது கருத்துக்கள் மற்றும் நிபுணத்துவம் குறித்து தி மோர்னிங் பத்திரிகைக்கு டி சில்வா பேட்டியொன்றை அளித்திருந்தார் .

அப்பேட்டி வருமாறு ;

**Q எரிவாயு சிலிண்டர்களில் கலவை மாற்றம், அழுத்தத்தில் மாற்றத்திற்கும் ஆபத்திற்கும் கொண்டுசென்றுள்ளதா ?**

பதில்: ஆம், நிச்சயமாக. கலவை என்னவென்று லிட்ரோவுக்கு உறுதியாகத் தெரியவில்லை. சில சமயங்களில் அவர்கள் 80:20 (பியூட்டேன் முதல் புரோப்பேன் வரை) அல்லது 70:30 என்று கூறுகிறார்கள். அடிப்படையில் 20% மாறுபடும் என்று அவர்களால் கூற முடியாது. ஒரு மதிப்பீடு 2% மாகும். 20% அடிப்படையில் மாறுபடுகிறது என்று அவர்கள் கூறினால், அது ஒரு யூகமாகும். அது ஒரு கணிப்பீடு அல்ல.

கலவை 50:50 செய்யப்பட்டால், எமது வெப்பநிலையில் அழுத்தத்தில் கிட்டத்தட்ட 50% அதிகரிப்பு உள்ளது. அதாவது வால்வு மற்றும் வாஷர் இந்த அழுத்தத்தைத் தாங்க முடியாது. ஹோஸ் மற்றும் ரெகுலேட்டர் போன்ற சந்தையில் உள்ள மற்ற அனைத்து கூறுகளும் 30:70 (புரோப்பேன்:பியூட்டேன்) கலவையை தாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், இரண்டு நிறுவனங்களும் லாப்ஸ் மற்றும் லிட்ரோ ஒரே கலவையை கடைப்பிடிக்க வேண்டும். மற்றையது உள்நாட்டு சந்தையில் தரம் இல்லை.

**Q ஏப்ரலில் கலவை மாற்றத்திற்கு உள்ளான லிட்ரோ சிலிண்டர்களை புழக்கத்தில் இருந்து எடுத்துவிட்டதாக நிறுவனம் கூறியிருந்தாலும். அவை இன்னும் சந்தை புழக்கத்தில் இருப்பதாக நீங்கள் நம்புகிறீர்களா?**

பதில்: சந்தை புழக்கத்தில் இருந்து அந்த சிலிண்டர்களை எடுத்துச் சென்றதை அவர்கள் நிரூபிக்க வேண்டும். அவை இன்னும் புழக்கத்தில் உள்ளதா என்று நாங்கள் சந்தேகிக்கிறோம். அதுதான் பிரச்சினை.

**Q சமீபத்திய தொடர் சம்பவங்களுக்கு கலவை மாற்றத்தைத் தவிர வேறு ஏதேனும் காரணங்கள் இருக்க முடியுமா?**

பதில்; இங்கு சிலிண்டர், வால்வு, ரெகுலேட்டர், குழாய் மற்றும் குக்கர் என்பன உள்ளன. சிலிண்டர் ஒரு அழுத்தம் உள்ள பாத்திரம் போன்றது. இலங்கையிலும் சிலிண்டருக்கான விவரக்குறிப்பு உள்ளது. ஆனால் அது இந்தியாவில் உள்ள விவரக்குறிப்புகள் போல் விரிவாக இல்லை. சிலிண்டர் தாங்கக்கூடிய அழுத்தத்தின் அளவை மட்டுமே இலங்கை குறிப்பிடுகிறது.

நிறுவனங்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை சிலிண்டர்களை சுத்தம் செய்கின்றன என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

இலங்கை மலிவான எரிவாயுவைப் பெறுகிறது. அதாவது அதிக அசுத்தங்களைக் கொண்ட குறைந்த தர வாயுவாகும் . இந்த அசுத்தங்களில் ஒரு சிறிய சதவீதம் சிலிண்டரில் கலந்து சிலிண்டரின் அடிப்பகுதியில் இருக்கும். அவுட்லெட்டிலிருந்து சிலிண்டரைப் பெறும்போது, கீழே உள்ள இந்த சிறிய அசுத்தங்களுக்கும் நீங்கள் பணம் செலுத்துகிறீர்கள். இதனால், வருடங்கள் செல்லச் செல்ல சிலிண்டரில் மாசுகள் சேரும்.

இதனால், ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை, அதை சுத்தம் செய்யும் பொறுப்பு நிறுவனங்களுக்கு உள்ளது. எங்களிடம் அதற்கான ஆதாரம் இல்லை என்றாலும், அவர்கள் அதை சுத்தம் செய்கிறார்கள் என்று லாப்ஸ் கூறியதாக நான் நம்புகிறேன். லிட்ரோ இது பற்றி எந்த அறிக்கையும் வெளியிடவில்லை என்று நினைக்கிறேன். மேலும் இலங்கையில் நிறுவனங்கள் அதனை சுத்தம் செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை. அங்குதான் இந்த நாட்டில் தரம் குறைந்துள்ளது. இந்த துப்புரவு செயல்முறை மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லையெனில் நிறுவனங்கள் வாடிக்கையாளரை ஏமாற்றுகின்றன. இல்லையெனில், வாடிக்கையாளர்கள் குப்பைகளுக்கும் பணம் செலுத்துகிறார்கள்.

ஒரு வால்வு விலை உயர்ந்ததல்ல, அதற்கு சுமார் 2 டொலர் மட்டுமே செலவாகும். வால்வுக்கும் ஒரு விவரக்குறிப்பு உள்ளது. வால்வு மிக முக்கியமான பகுதியாகும். இலங்கை வால்வுகளை உற்பத்தி செய்யவில்லை. அவை இறக்குமதி செய்யப்படுகின்றன. வால்வு சிலிண்டரின் மீது ஒரு இயந்திரத்தால் இறுக்கப்படுகிறது. இலங்கை உலைகளில் எரிவாயு நிரப்பும் பணி மட்டுமே செய்யப்படுகிறது. வால்வின் வெளிப்புறத்தில் ஒரு ரப்பர் வாஷர் உள்ளது. அது காலம் செல்லச் செல்ல சேதமடைகிறது. நிறுவனங்கள் அதைச் சரிபார்ப்பதாகத் தெரியவில்லை. வால்வுக்குள் வாஷர் சேதமடைந்தால், கசிவு ஏற்படுகிறது நிறுவனங்களுக்குத் தெரியும். ஒவ்வொரு முறையும் சிலிண்டர் உலைக்கு திரும்பும் போது அதை சரிபார்க்க வேண்டும். அவர்கள் கசிவுகளை சரிபார்க்க வேண்டும்.ஒவ்வொரு முறையும் சிலிண்டரை உலைக்கு திருப்பி அனுப்பும் போது அவர்கள் இந்த வால்வை மாற்ற வேண்டும். ஏனெனில் இது நிறுவனங்களுக்கு மிகக் குறைந்த செலவாகும்.

**Q எனவே நிறுவனங்களால் வால்வுகள் முறையாக சரிபார்க்கப்படவில்லை என்று நீங்கள் நம்புகிறீர்களா?**

பதில்;அவர்கள் அதைச் செய்தால், எங்களுக்கு எந்தக் கசிவும் இருக்காது. சிலிண்டர்களில் இருந்து கசிவு இருப்பதைக் காட்டும் சோப்பு சோதனைகளை மக்கள் வீட்டில் நடத்தி வருகின்றனர். அதாவது நிறுவனங்கள் அதை சரிபார்க்கவில்லை. ஒவ்வொரு சிலிண்டரையும் சரிபார்த்ததாக லிட்ரோ நிறுவனம் கூறுகிறது என்றால், சந்தையில் கசிவுகளுடன் சிலிண்டர்கள் வருவது எப்படி? சிலிண்டர்களில் இருந்து கசிவு ஏற்படுகிறதா என்பதைச் சரிபார்க்க லிட்ரோ பயன்படுத்துவதாகக் கூறும் நீர் குளியல் காட்சியைக் காட்டும் வீடியோ ஒன்று பரவி வருகிறது. ஆனால் கசிவுகளை சரிபார்க்க இது மிகவும் கச்சா வழி. அத்தகைய நீர் குளியல் மூலம் சிறிய கசிவுகளை எவ்வாறு கண்டறிய முடியும்?

**Q அதிகாரிகள் சிலர் சிலிண்டரில் இருந்து சிறு கசிவுகள் ஏற்படுவதாகவும் அது இயற்கையானது என்றும் கூறியுள்ளனர். அப்படியா? அதுதான் நிலையான வழக்கா?**

பதில்;இல்லை, அப்படி இருக்கவே கூடாது. எந்த சிலிண்டரிலிருந்தும் கசிவு ஏற்படக்கூடாது. அது அவர்கள் கடைப்பிடிக்கும் பாதுகாப்புத் தரமாக இருக்க வேண்டும்.

**Q எனவே சிலிண்டர் மற்றும் வால்வை நிறுவனங்கள் சரிபார்க்க வேண்டுமா?**

பதில்; வால்வை மாற்றுவதும் சரிபார்ப்பதும் நிறுவனங்களின் கடமையும் பொறுப்புமாகும். இதற்கு எதிராக யாரும் நடவடிக்கை எடுப்பதில்லை. இதை அமைச்சர்கள் மூடி மறைக்கிறார்கள் என்று கூட பொது மக்கள் நினைக்கலாம். சிலிண்டர் மற்றும் வால்வு விநியோகஸ்தர் பொறுப்பு. சிறிய கசிவு ஏற்பட்டால், அதை சந்தையில் வெளியிடக்கூடாது.

குழாய், ரெகுலேட்டர் மற்றும் குக்கர் போன்ற பிற கூறுகள் நுகர்வோர் மற்றும் நுகர்வோர் விவகார அதிகார சபையின் பொறுப்பாகும்.

**Q கடந்த மாதம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கலவை மாற்றங்களைச் சரிபார்ப்பதற்காக பரிசோதனைகளை நடத்துவதற்காக பல மாதிரிகளை எடுத்திருந்தது. இருப்பினும், இந்த பரிசோதனைகள் இரண்டு எல்.பி.ஜி. நிறுவனங்களால் விமர்சிக்கப்பட்டுள்ளன. மாதிரிகள் சரியாக எங்கிருந்து எடுக்கப்பட வேண்டும்?**

பதில்;அவர்கள் திரவமாக்கப்பட்ட படிவத்திலிருந்து மாதிரிகளை எடுக்க வேண்டும்.

**Q சபுகஸ்கந்தவின் ஆய்வுகூட வசதிகளை தாங்கள் நம்பவில்லை என எல்.பி.ஜி .நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன. சபுகஸ்கந்த பரிசோதனை முடிவுகளை நம்ப முடியுமா?**

பதில்;ஆம், நிச்சயமாக. ஏன் கூடாது? சபுகஸ்கந்த நீண்டகாலமாக அங்கு உள்ளது.

**Q இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அவர்களின் முடிவுகளை மொரட்டுவை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியுள்ளதாக கூறப்படுகிறது. அது அறிக்கையை தொகுக்கும். மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் அறிக்கையைப் பார்த்தீர்களா? கடந்த வாரம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இது பற்றி கலந்துரையாடப்பட்டதா?**

பதில்;இல்லை, அது எனக்கு ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் காட்டப்படவில்லை. அரசியல்வாதிகள் தான் அதிகமாகப் பேசுவதால், அது எந்த வகையிலும் ஆக்கபூர்வமானதாகவோ அல்லது பயனுள்ளதாகவோ இல்லை. நான் உட்பட நிபுணர்கள் எங்களின் கருத்துக்களை முன்வைக்க ஒரு சிறிய வாய்ப்பு மட்டுமே கிடைத்தது. இது ஒரு பயனுள்ள நடவடிக்கை என்று நான் நினைக்கவில்லை.

**Q உடனடியாக அடுத்தகட்ட நடவடிக்கைகள் என்னவாக இருக்க வேண்டும்?**

பதில்;பாதுகாப்பு தொடர்பாக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நிறுவனங்களால் வால்வுகள் சரிபார்க்கப்பட்டு முறையாகப் பராமரிக்கப்படுவதையும், சிலிண்டர்கள் ஐந்து வருடங்களுக்கொருதடவை சுத்தம் செய்யப்படுவதையும் அவர்கள் உறுதி செய்ய வேண்டும். நான் வீட்டில் பயன்படுத்தும் காஸ் சிலிண்டர், கடைசியாக மே 2016 இல் ஆய்வு செய்யப்பட்டது. சிலிண்டரில் திகதி குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக புழக்கத்தில் உள்ளது. நான் உங்களிடம் குறிப்பிட்டுள்ளபடி, சிலிண்டர் வால்வை ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் மாற்ற வேண்டும். ஒருவேளை எரிவாயு நிறுவனங்கள் சரியான நேரத்தில் வால்வை மாற்றாததால் பெரும்பாலான வெடிப்புகள் நிகழ்ந்திருக்கலாம். அது மிகவும் ஆபத்தானது.

இந்தப் பிரச்சினை உண்மையில் பெண்களை அதிகளவுக்கு பாதிக்கிறது.குடும்பப் பெண்ணின் காலில் நேரம் குறித்த குண்டை (டைம்பாம்) கட்டுவது போன்றது இது. எமது கலாசாரத்தில், சமையலறை என்பது ஒரு பெண்ணின் களம். காலையில் கணவனுக்கு சமையலறையில் தேநீர் போட்டுக் கொடுப்பதுதான் முதலில் செய்யும்வேலை. பெண் சமையலறையில் அதிக நேரத்தை செலவிடுகிறார். பெண் எம்.பி.க்கள் இதைப் பற்றி அதிகம் கவலைப்படாமல் இருப்பது அல்லது இதைப் பற்றி அதிகம் குரல் கொடுப்பது ஏன் என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. பெண்கள் என்பதால், இந்தப் பிரச்சினையை பெரிதாகக் கருதுவதில்லை.

நீண்டகால அடிப்படையில் , நிறுவனங்கள் தாங்கள் கடைப்பிடிக்கும் பாதுகாப்புத் தரங்களைப் பற்றி பாராளுமன்றத்திற்கு தொடர்ந்து இற்றைப்படுத்துவதில் சிறந்த வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும். நிறுவனத்தின் வலைத்தளங்கள் விலை மற்றும் நீங்கள் தயாரிப்புகளை எங்கிருந்து வாங்கலாம் என்பதை மட்டுமே காண்பிக்கும். தரநிலைகள் அல்லது பாதுகாப்புத் தரநிலைகள் பற்றி எதுவும் இல்லை. அது ஆங்கிலத்தில் மட்டுமே உள்ளது. வாடிக்கையாளர்கள் அதை எவ்வாறு அணுகுவது மற்றும் அவற்றைப் புரிந்துகொள்வது? இந்த விடயங்களும் சீர் செய்யப்பட வேண்டும்.

**Q நுகர்வோருக்கு ஏதாவது செய்தி?**

பதில் ;வீட்டில் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். காலையில் காஸ் சிலிண்டரை பயன்படுத்துவதற்கு முன், அனைத்து ஜன்னல்களையும் கதவுகளையும் திறக்கவும். இதனால் அறையில் போதுமான காற்றோட்டம் இருக்கும். சமையலறையில் கைப்பேசி அல்லது பட்டரியில் இயங்கும் வேறு எந்த சாதனத்தையும் பயன்படுத்த வேண்டாம். இது தீப்பொறியை ஏற்படுத்தும். சந்தையில் புழக்கத்தில் இருக்கும் பட்டரியால் இயக்கப்படும் வாயு கசிவு கண்டறிதல் கருவிகள் கூட சிலிண்டருக்கு அருகில் பயன்படுத்தக்கூடாது. ஏனெனில் அவை தீப்பொறிகள் மற்றும் அடுத்தடுத்த வெடிப்புகளை ஏற்படுத்தும்.



# மோசமாகச் சேதமாக்கப்பட்ட பருத்தித்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான கிரவல் வீதி

## -திட்டமிடல் இன்றி வெட்டப்பட்டதால் மக்கள் அவதி -





நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்திற்கு வடக்கு புறமாக ஆலய வடக்கு வீதியை மருவிச்செல்லும் பருத்தித்துறை பிரதேச சபைக்கு சொந்தமான கிரவல் வீதி (இணைப்பு வீதி) சேதமாக்கப்பட்டுள்ளதால் இவ்வீதி மோசமாகச் சேதமடைந்து மக்கள் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பிரதேச சபையால் போடப்பட்ட இவ்வீதி நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயம், நாகர்கோவில் கண்ணகை அம்மன் ஆலயம், நாகர்கோவில் பெரியவளவு பிள்ளையார் ஆலயம் மற்றும் நாகர்கோவில் தொற்கு மக்கள் குடியிருப்பு, வீட்டுத் திட்டம் என்பவற்றுக்கு அண்மையில் செல்வதால் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாமலும் வீட்டுத் திட்டங்களுக்கான கட்டுமானப் பொருட்களை கொண்டு செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

வடக்கு பகுதியில் உள்ள மழை வெள்ளத்தை வயல் நிலங்களுக்குப் பாய்ச்சுவதற்காக இவ்வீதியை வெட்டி பிரதேச சபையினரால் சீமெந்துக் குழாய் வைக்கப்பட்டுள்ளது. இக்குழாய் வைத்த பின்னர் வீதியை நன்கு செப்பனிட்டிருக்க வேண்டும். எனினும் திட்டமிடல் இன்றி செய்யப்பட்ட வேலையால் பொதுமக்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு இவ்வீதி சேதமாக்கப்பட்டுள்ளது. இவ்வீதியால் ஆபத்துக்கு மத்தியிலும் பயணிப்போர் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன.

வெள்ள நீரை வெளியேற்ற வேண்டியது அவசியமாயினும் ஏனையவர்கள் பாதிக்கப்படாத வகையில் அதனை முன்னெடுக்க வேண்டியது கட்டாயமானதாகும். எனவே, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர், செயலாளர் ஆகியோர் தலையிட்டு வெட்டப்பட்ட வீதியை முறையாக செப்பனிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வேலணையை வெற்றிபெற செய்ய ஒன்றுபட்டு உழைப்போம்

## - பிரதேச சபையின் உறுப்பினர் அழைப்பு-



எதிர்த்தரப்பினர் பாதீட்டை தோற்கடிப்பதற்கு எடுத்திருந்த முயற்சியை சுயநலமற்ற வகையில் மக்கள் பணிக்காக பயன்படுத்த முன்வந்திருந்தால் அது எமது பிரதேசத்தின் ஆரோக்கியத்திற்கு பயனுள்ளதாக அமைந்திருக்கும் என தெரிவித்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச சபை உறுப்பினர் அனுசியா ஜெயகாந்த் தெரிவித்தார்.

இது தொடர்டபில் அவர் மேலும் கூறுகையில் ,

எமது வேலணை பிரதேசமானது யாழ் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் மிக வருமானம் குறைந்த சபைகளுள் ஒன்று. வாழும் மக்களும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். இதனால் வரி உள்ளிட்ட வருவாய் ஈட்டல்களும் குறைவாக உள்ளது. ஆனாலும் அதிலிருந்து மீண்டு அவை படிப்படியாக கட்டமைக்க்கப்பட்டு வருகின்றது.

இதனால் எமது சபையில் உறுப்பினர்களின் முன்மொழிவுக்காக ஒதுக்கப்படும் நிதியும் சில இலட்சம் ரூபாக்களாகவே இருக்கின்றது. இதைக்கொண்டு எமது பிரதேசத்தின தேவைகளை முழுமையாக முன்னெடுக்க முடியாது. இது எமது அனைத்த உறுப்பினர்களுக்கும் தெரிந்ததொன்றே அதனடிப்படையில் அனைத்து உறுப்பினர்களும் பேதங்களின்றி எமது பிரதேசத்தின் தேவைகளை இனங்காண்பதும் அபிவிருத்திக்காக எவ்வாறு நிதியை பெற்றுக்கொள்ளலாம் என்றும் அதற்கான வழிமுறைகள் தொடர்பிலும் ஆரோக்கியமான விடயங்களை ஆராய்வதே சிறந்தது.

இதேநேரம் அவ்வாறு கடந்த காலங்களில் பல முன்மொழிவுகள் பல உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும் அவை சாத்திப்படாமல் போனமை அல்லது நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட கால தாமதங்கள் தொடர்பிலும் நாம் அக்கறை கொள்ள கொள் வேண்டும்.

அவ்வாறு நடைபெறாமற் போனமைக்கு வருத்தங்களை தெரிவிப்பதுடன் அவற்றையே தொடர்ந்தும் சுட்டிக்காட்டி விவாதித்தக்கொண்டிராமல் அவற்றை நடைமுறையாக்குவதற்கான வழியை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து பங்காற்றுவதும் அவசியம். அதுமட்டுமல்லாது எமது பிரதேச சபையின் ஆட்சிக்காலத்தை எமது கட்சி பொறுப்பேற்ற 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது கட்சி எதிர் கட்சியாகவே இருந்தது.

அதனால் எமது சபைக்கான வருமானங்கள் ஒதுக்கீடுகளை மத்திய அரசால் அதிகளவாக கிடைக்கப் பெறுவதில் பல தடைகள் காணப்பட்டன.

இதேநேரம் இக்காலப் பகுதியில் சில திட்டடங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை பூரணமாகாத நிலையிலேயே உள்ளது. இதையும் பூணப்படுத்த வேண்டிய நிலைக்குள்ளும் எமது இந்த சபை தள்ளப்பட்டுள்ளது.

அதேபோன்று தற்போது நாம் ஆளும் கட்சியாக இருந்தாலும் நாட்டின் பொருளாதார நிலைமை கொரோனா தொற்றின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதால் மத்திய அரசிடமிருந்து பெற்று திட்டங்களை முன்னெடுப்பதில் கால தாமதங்கள் காணப்படுகின்றது. ஆனாலும் எமது தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் விசேட முன்மொழிவுகளூடாகவும் அவரது அமைச்சின் உடாகவும் வாழ்வாதாரம் கட்டுமாணம் உள்ளிட்ட பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என மேலும் தெரிவித்தார். (75)

# ஒரு பேருந்து நிலையத்திற்கு இரு தடவைகள் அடிக்கல் நாட்டல்

ஒரு கட்டடத்திற்கு இரு தடவைகள் அடிக்கல் நாட்டுவது அரசியல் நோக்கம் கொண்டதாக அமையும் என கரைதுறைபற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் தற்போதைய உறுப்பினருமான க.தவராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு பேருந்து நிலையம் அவசியமானது. பேருந்து நிலையத்தின் கட்டட வேலைகள் முழுமையாக நிறைவு செய்யப்படாமலே திறப்பு விழா நடைபெற்றது. பேருந்து நிலையத்தின் மிகுதி வேலைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் பேருந்து நிலையத்தின் மிகுதி வேலைகளுக்கும் தற்போது அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ஒரு கட்டடத்திற்கு இரு தடவைகள் அடிக்கல் நாட்டுவது என்பது அரசியல் நோக்கம் கொண்டதாக அமையும். மக்களுக்கு தேவை ஒரு சிறந்த பேருந்து நிலையம். அதற்காக இரு தடவைகள் அடிக்கல் நாட்டுவதும் அதனை இரு தடவைகள் திறப்பதும் அரசியல் விழாக்களாகவே அமைகின்றன. தற்போது இரண்டாவது தடவையும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்தின் முழுமையான வேலைகள் எப்போது நிறைவடையும். மக்களுக்கான பேருந்து நிலையம் எப்போது முழுமை பெறும் என்பவை வினாக்குறியாகவே உள்ளன. காரணம் முல்லைத்தீவு பேருந்து நிலையம் பல ஆண்டுகளாக முழுமை பெறாமலே காணப்படுகின்றமை மாவட்டத்தின் போக்குவரத்து துறையில் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தி உள்ளது எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (27)

# ஈழத்திலே அரங்கேறிய இனப்படுகொலைக்கு ஓர் சர்வதேச விசாரணை தேவை

## சட்டத்தரணி சுகாஸ் தெரிவிப்பு-

ஈழத்திலே அரங்கேறிய இனப்படுகொலைக்கு ஓர் சர்வதேச விசாரணை வாயிலாக பொறுப்பு கூறல் மேற்கொள்ளப்படாதவிடத்து மனித உரிமை மீறல்கள் தொடரவே செய்யும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும், பிரபல சட்டத்தரணியுமான கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், இலங்கையில் மனித உரிமைகள் என்பது வெறும் பேச்சளவிலும், எழுத்தளவிலும் மாத்திரமே, இருக்கிறதே தவிர, நடைமுறையில் மக்கள் அனுபவிக்கக் கூடியதாக இல்லை என்பது வெளிப்படை உண்மை.

அதிலும் குறிப்பாக, தமிழ்த் தேசிய இனம் திட்டமிட்ட வகையில் மனித உரிமைகள் ரீதியாக ஒடுக்கப்பட்டும், அடக்கப்பட்டும், முடக்கப்பட்டும் வருவது கடந்தகாலம் சொல்லித் தந்த பாடம், நிகழ் காலத்திலும் அதுதான் தொடர்கின்றது. ஆனால் மிக அண்மையில் மிக வேதனையான விடயம். உலக நெறிமுறைகளுக்கு மாறாக, சர்வதேச சட்டங்களுக்கு முரணாக, சர்வதேச மனிதாபிமானமற்ற, மனித உரிமை பட்டயங்களுக்கு முரணாக, இறந்த உறவுகளை நினைவு கூருகின்ற தமிழ் மக்களினுடைய அடிப்படை உரிமை, இன்றியமையாத உரிமை, மறுக்கப்பட்டிருக்கின்றது. அதிலும், சில இடங்களில் நீதிமன்றங்கள், நினைவேந்தலுக்கு தடை விதிக்காத சூழலில் கூட பொலிஸாரும், இராணுவத்தினரும், நினைவேந்தலை தடுத்தமை அப்பட்டமான மனித உரிமை மீறல் என்பதோடு, தனது நாட்டின் நீதித்துறையை தாங்களே மதிக்கப் போவதில்லை என்பதை அதே நாட்டின் அரசும், பொலிஸாரும் வெளிப்படையாக வெளிப்படுத்தி நிற்கின்றார்கள்.

இது கவலையான விடயம் மாத்திரம் அல்ல, ஒரு அபாய சமிக்ஞை ஆகும். ஏனென்றால், ஒரு நாட்டினுடைய இராணுவம் அல்லது பொலிஸ் அந்த நாட்டினுடைய நீதித்துறையினுடைய, தீர்ப்புக்களையும், கட்டளைகளையும், உத்தரவுகளையும் செவிமடுக்கத் தவறுவார்களேயானால் அந்த நாட்டில் எவ்வாறு எதிர்காலத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ முடியும் என்கின்ற ஒரு பாரிய வினா எழுந்திருப்பது தவிர்க்க முடியாததாகிறது என மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழில் உயிர்காக்கும் செயலமர்வு பயிற்சி



அனர்த்தத்தின் போது உயிர்காக்கும் உன்னத பணியினை சிறப்பாக மேற்கொள்வதற்கான பயிற்சியுடன் கூடிய செயலமர்வு நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

அமெரிக்க தூதரகத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகியவற்றில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட இளைஞர்களுக்கு வழங்கப்பட்டது. (75)

# கைதடி பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியது

கைதடி பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறிய சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடி வடக்கு பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் எவருக்கும் எதுவித பாதிப்புக்களும் ஏற்படவில்லையென தெரிவிக்கப்படுள்ளது.

அண்மைக்காலமாக இலங்கை முழுவதும் எரிவாயு அடுப்புகள், எரிவாயு சிலிண்டர்கள் வெடித்த வண்ணம் உள்ளன. இந்த நிலையிலேயே கைதடி பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறிய சம்பவம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(40),(13)


# சேவைநலன் பாராட்டு



திருமதி.
அமிர்தகௌரி
கேதீஸ்வரநாதன்
ஆய்வுகூட உதவியாளர்
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி
அச்சுவேலி

சேவை விபரம்
14.10.1988- யா/கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் (முதல் நியமனம்)
01.02.1999- யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி
10.02.2021- யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி

எமது கல்லூரியில் இருந்து ஓய்வு பெறும் ஆய்வு கூட உதவியாளர் திருமதி.அமிர்தகௌரி கேதீஸ்வரநாதன் அவர்களை உளமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரின் ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி.


# வடக்கு மாகாண அரச சேவை உத்தியோகத்தர்களுக்கான அறிவித்தல்

2021.12.01ஆம் திகதியிடப்பட்டு www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும், மற்றும் பத்திரிகைகள் மூலமும் வெளியிடப்பட்ட மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் அறிவித்தலுக்கு அமைய மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க விரும்பும் அலுவலர்களுக்கான மாவட்ட ரீதியான சேவை, 2021 டிசம்பர் மாதத்தில் நடைபெறும் என வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நாளை 08 ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும், வவுனியா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நாளை 15 ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும்,

மன்னார் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் 22 ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும், கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் 29 ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க முடியும்.

2021 டிசம்பர் மாதத்துக்குள் சமர்ப்பிக்க உத்தேசிக்கும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான மேன்முறையீடுகளை, இல 393/48, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள வடக்கு மாகாணப் பொதுச்சேவை அலுவலகத்தில் திங்கட்கிழமைகளில் கையளிக்க முடியும்.

2013.07.03 ஆம் திகதியில் வெளியிடப்பட்ட 1817/30 இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்குவிதிக்கோவையின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு முறைகளுக்கமைவாக மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க முடியும் எனவும் வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார்.

# இயற்கையைப் புறக்கணிப்பது பெற்ற தாயை புறக்கணிப்பதற்கு ஈடானது

-யப்பான் கக்சுயின் பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலை ஆய்வுப் பேராசிரியர் தெரிவிப்பு-

இயற்கையைப் புறக்கணிப்பது பெற்ற தாயை புறக்கணிப்பதற்கு ஈடானது என யப்பான் கக்சுயின் பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலை ஆய்வுப் பேராசிரியர் முனைவர் ச.மனோன்மணி தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற 'சைவசமய வாழ்வியல் முறைமைகளில் இயற்கை மேலாண்மை' என்ற ஆய்வரங்கத்தில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்; காலம் எம்மை இப்போது வழிநடத்துகிறது.மனித ஆற்றல் தோற்று நிற்கும் போது முன்னோர் முறைமைகளை நாடும் முயற்சியில் ஈடுபடுகிறோம். இயற்கை எம்மைச் சூழ இருப்பது எம்மை பேணுவதற்காக. உணவு, உடை, உறையுள் தரும் அன்னை போல் எம்மோடு இணைந்திருக்கும்.

ஆனால் நாம் இயற்கையின் இயக்கத்தை மறந்து பெற்ற தாயை புறக்கணிப்பது போல் இயற்கையை புறந்தள்ளி விட்டு செயற்கையில் மூழ்கிக் கிடக்கிறோம். எமது முன்னோர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தவர்கள்.

இயற்கையை மதித்து வாழ பழக்கப்பட்டவர்கள் அவர்கள். ஆனால் செயற்கையை நம்பிய எமக்கு காலம் எல்லாவற்றையும் உணர்த்திவிட்டது. செயற்கையால் நாம் படும் துன்பங்களையும்,அவலங்களையும் போக்குவதற்கு எம்மை நாமே திருத்திக் கொள்ள வேண்டிய வேளையில் இருக்கிறோம்.எமது முன்னோர்கள் இயற்கையின் பேராற்றலை வழிபடுவதனை வாழ்வியலாகக் கொண்டிருந்தனர். மரங்களை வழிபட்டனர்.

ஆனால் நாம் அந்த பெரு மரங்களை வெட்டி மாளிகைகள் அமைக்கின்றோம். இயற்கையுடன் இணைப்பை கொண்டிருந்த எம் முன்னோருக்கு எந்தவிதமான இடரினையும் எதிர்கொள்ளும் பேராற்றல் கிடைத்தது.முன்னோர்கள் வெள்ளத்தை சேமிக்க குளம் கட்டினார்கள்.அளவுக்கு மீறிய வெள்ளத்தை ஆழ் கடலோடு சேர்க்கும் திட்டமும் வைத்திருந்தனர்.

ஆனால் இன்று வீட்டைச் சுற்றி நாலாபுறமும் கல் சுவரை எழுப்பி வெள்ளத்தில் நீந்துகிறோம். ஐம்பூதங்களையும் மறந்து வாழ்வியல் முறைமைகளை மாற்றி இன்று பல அவலங்களை ஏற்று ஆபத்தில் இருந்து மீள வழி தேடுகிறோம்.பயபக்தி என்ற உணர்வை ஏற்படுத்தி எம்மவர்கள் மனங்களை மாற்ற முடியும் எனத் தோன்றுகிறது என்றார். (13)

# முன்னாள் பிரதேசசபை உறுப்பினருக்கு பயங்கரவாத தடுப்பு பிரிவால் அழைப்பு

சாவகச்சேரி பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் செல்லையா ஜெயபாலனுக்கு பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் இருந்து விசாரணைக்காக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடுப்பு பிரிவு மற்றும் விசாரணைப் பிரிவு-01 இனால் மேற்கொள்ளப்படும் விசாரணைக்கு வாக்கு மூலம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக இன்று காலை கொழும்பு-05இல் உள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு நிலைய பொறுப்பதிகாரியை சந்திக்குமாறு குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அழைப்பு விடுக்கப்பட்ட நபர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி கடந்த ஒரு வருட காலம் பிரதேசசபை உறுப்பினராக செயலாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (13)

# வீதி விபத்தில் இருவர் படுகாயம்



கிளிநொச்சி -பரந்தன் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முற்பகல் 11மணியளவில் யாழ்ப்பாணத்தை நோக்கி பயணித்து கொண்டிருந்த உந்துருளி மீது பின்னால் வந்த டிப்பர் மோதியதில் உந்துருளியில் பயணித்த இருவரும் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த இருவரும் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு உள்ளனர். (27)

# கசிப்பு உற்பத்தியைத் தடுக்க நடவடிக்கை எடுக்க மறுக்கும் பொலிசார்

-பொதுமக்கள் குற்றச்சாட்டு-

மூங்கிலாற்றுப் பகுதியில் அதிகரித்த கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகள் காணப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை செய்வோர் நாளாந்தம் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது விசேடமாக மூங்கிலாறு தெற்கு கிராமத்தில் இந்த நிலை காணப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். கசிப்பு பாவனையால் மாலை மற்றும் இரவு நேரங்களில் பொதுமக்கள் நடமாட முடியாத அளவுக்கு அதிகமான வன்முறைகள் இடம்பெறுகின்றன.

குறிப்பாக கசிப்பு குடிப்பதற்காக மூங்கிலாறு தெற்கு கிராமத்திற்கு வருபவர்கள் மோட்டார் சைக்கிளை வேகமாக ஓட்டுதல் அதிக சத்தத்துடன் ஓட்டுதல் குடித்துவிட்டு வீதிகளில் விழுந்து கிடத்தல் மற்றும் விற்பனை செய்வோர் இரவு நேரங்களில் தூசன வார்த்தைகளை பெரிதாக பேசுவதுடன் அருகில் உள்ளவர்களை சண்டைக்கு இழுத்தல் போன்ற வன்முறைகள் அதிகமாக இடம்பெறுகின்றன.

இந்த விடயம் தொடர்பாக அநேக தடவைகள் பொலிசாருக்கு தெரியப்படுத்தியும் ஒழுங்கான முறையில் கசிப்பை ஒழிப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் பொலிசார் எடுக்கவில்லை என்று பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிராம அபிவிருத்தி சங்கத்திடம் இவற்றினை பல முறை பொதுமக்கள் முறைப்பாடு தெரிவித்ததன் ஊடாக கிராம அபிவிருத்தி சங்கம் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை செய்வோரை அழைத்து தனியாக ஒரு சந்திப்பை நடத்தி இனிமேல் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாமென கூறியதுடன் கிராமம் முழுவதும் பொதுவான அறிவித்தலையும் விடுத்துள்ளனர். இதன் விளைவாக கசிப்பு உற்பத்தி செய்வோர் குறைவடைந்தாலும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்தே செல்கின்றது.

குறிப்பாக மூங்கிலாறு தெற்கு கிராமத்தில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் இருவர் தனக்கு அருகில் உள்ள குடும்பங்களை அடிக்கடி சண்டைக்கு இழுத்து அவர்கள்மீது கோடாலி,கத்தி,வாள் போன்ற ஆயுதங்களை வைத்து மிரட்டுவதுடன் தூசன வார்த்தைகளை பெரிதாக பேசுவதால் மாணவர்கள் இரவு நேரங்களில் கல்விகற்க முடியாத சூழ்நிலை இருப்பதனால் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறான சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை செய்வோருக்கு மூங்கிலாறு தெற்கு கிராமத்தில் இருந்து உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளதுடன் பொலிசாரின் அசமந்தப்போக்கு பல குடும்பங்களை சீர்குலைக்கின்றது. இந்த சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்த்து காத்திருக்கின்றோம் என கவலையுடன் உள்ளனர். (27)

# மாதகல் கடற்பரப்பில் 275கிலோ கஞ்சா மீட்பு

மாதகல் கடற்பரப்பில் சுமார் 175 கிலோ கஞ்சா கடற்படையினரால் நேற்று மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, குறித்த கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான படகு ஒன்று இருப்பதை அவதானித்த கடற்படையினர் அதனை சோதனையிட்ட போது கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

சம்பவத்தில் எவரும் கைது செய்யப்படாத நிலையில் கடற்படையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (75)

# சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்- நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆன்மீகத்திலகம் இளம்சைவப்புலவர் க.கைலநாதன் 'வேலை வணங்குவது நமக்கு வேலை' என்னும் விடயப் பொருளில் சிறப்புச்சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

# கஜமுக சூர சங்கார நிகழ்வு

யாழ்.திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில், கஜமுக சூர சங்கார நிகழ்வை முன்னிட்டு, பஞ்சமுக அர்ச்சனை நிகழ்வு, நாளை புதன்கிழமை காலை இடம்பெறுவதுடன், அன்றைய தினம் மாலை நான்கு மணிக்கு, கஜமுக சூர சங்கார நிகழ்வும் இடம்பெறும்.

அத்துடன் மறுநாள் மாலை 5:30 மணிக்கு, விநாயகர் பெருங்கதை உற்சவமும் இடம்பெறுமென, ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

# சிறுவர் பூங்கா அமைக்க வேண்டும்

- நகரசபை உறுப்பினர் கோரிக்கை-



சாவகச்சேரி நகரசபையினர் நகர எல்லைக்குள் சிறுவர் பூங்கா அமைக்கும் செயற்பாட்டினை துரிதப்படுத்த வேண்டும் என நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நகரசபையில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பு அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மக்கள் நகரசபையிடம் இருந்து பொது வேலைத்திட்டங்களை அதிகம் எதிர்பார்க்கின்றனர். குறிப்பாக சாவகச்சேரி நகரசபையினர் சிறுவர் பூங்கா அமைப்பதுடன்,பொது விளையாட்டு மைதானத்தையும் சீர் செய்ய வேண்டிய தேவைப்பாடு உள்ளது. அந்த வகையில் சிறுவர் பூங்காவிற்கான காணி நகரசபையால் கொள்வனவு செய்யப்பட்டு, காணி எல்லைப்படுத்தும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

குறித்த செயற்பாட்டினை துரிதப்படுத்தி எமது சபை காலத்திற்குள் சிறுவர் பூங்கா அமைக்கப்பட வேண்டும்.கொரோனா காலத்தில் பல சிறார்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாகி உள்ளனர். தனிமையான உணர்வொன்று அவர்களுக்குள் குடிகொண்டு விட்டது. எனவே சிறுவர் பூங்காவினை துரிதப்படுத்தி அமையுங்கள். இம் மாதத்திற்குள் சிறுவர் பூங்கா அமைப்பது தொடர்பான குழு ஒன்றை நியமித்து உடனடியாக வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். என்றார்.

# இரட்டைவாய்க்கால் சந்தி முதல் சாலை வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை



முல்லைத்தீவு மாவட்டத்தின் இரட்டைவாய்க்கால் சந்தி முதல் சாலை வரைக்குமான சுமார் 13 கிலோ மீற்றர் நீளமான வீதி இதுவரை புனரமைக்கப்படாமையினால் கரையோர கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் அன்றாட போக்குவரத்துக்களில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சாலை செம்மண் குன்று, புதுமாத்தளன், அம்பலவன்பொக்கணை வலைஞர் மடம் போன்ற கரையோர கிராமங்களில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தநிலையில் குறித்த கிரமங்களுக்கான பிரதான வீதியாக காணப்படுகின்ற இரட்டைவாய்க்கால் சந்தியிலிருந்து சாலை வரைக்குமான சுமார் 13 கிலோ மீற்றர் மீது எந்தவித புனரமைப்புக்களுமின்றி குண்டும் குழியுமாக காணப்படுவதுடன் தற்போதைய மழை காலத்தில் வெள்ளை நீர் தேங்கி காணப்படுகின்றது.

இதனால் குறித்த கிராமத்தில் வாழுகின்ற மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் அத்துடன் அம்பலவன்பொக்கணை பாடசாலை, புதுமாத்தளன் பாடசாலை வளைஞர் மடம் பாடசாலை போன்ற பாடசாலைகளுக்கான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு செல்லும் ஆசிரியர்களின் போக்கு வரத்தில் இடர்பாடுகள் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். எனவே இவ்வாறு காணப்படுகின்ற குறித்த வீதியை புனரமைத்து தருவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தாங்கள் தொடர்ச்சியாக கேரிக்கைகளை முன்வைத்து வருவதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (55)

# பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 190 சந்தேகநபர்கள் கைது



கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையான கலப்பகுதியில் மாவட்ட மதுவரி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 190 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட மதுவரித் திணைக்களத்தினல் தெரிவிக்கப்பட்டுள்ளது

மாவட்டத்தில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனை என்பன அதிகரித்த நிலையிலேயே காணப்படுகின்றது இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பொலிசார் மற்றும் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தொடர்ச்சியாக சுற்றிவளைப்புகள் மேற்கொண்டு பலரை கைது செய்து வழக்குகளை பதிவு செய்துள்ளனர்.அந்த அடிப்படையிலேயே கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் இன்று வரைக்கும் மதுவரித் திணைக்களத்தினால் 190 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன என்றும் அதாவது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 02 பேரும் கசிப்பு உடைமையில் வைத்திருந்த 34 பேரும் பிறநாட்டு குடி வகைகளை வைத்து இருந்த 03 பேரும் கசிப்பு உற்பத்தி காரணம் வைத்திருந்ததை 03 பேரும் கோடா வைத்திருந்த ஒருவரும் அனுமதிப்பத்திரமின்றி கள் விற்பனை செய்தமை மற்றும் உடமையில் வைத்திருந்தமை போன்ற குற்றச்சட்டுக்களில் 147 பேரும் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட மதுவரி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (55)

# அரங்க கதையாடல் நிகழ்வு

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் தொடர் 09 நிகழ்வின்55ஆவது கதையாடல் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரளயன் நாடகச் செயற்பாட்டாளர் , திரைப்பட இயக்குநர் (தமிழ்நாடு இந்தியா )தமிழ் சூழலில் 'வீதிநாடகம்' வடிவ உள்ளடக்கமும் வளர்ச்சிப்போக்கும் என்ற விடயப் பொருளில் கதையாடவுள்ளார் . நிறைவுரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்.

ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647334 8261கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## -பிணைமுறி மோசடி வழக்கு-

# 11 குற்றச்சாட்டுகளிலிருந்து ரவி உட்பட 10 பேர் விடுதலை

2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்ற பிணைமுறி ஏலத்தின் போது 15 பில்லியன் ரூபா பணத்தை முறைகேடாக பயன்படுத்திய 22 குற்றச் சாட்டுகளில் 11 குற்றச்சாட்டுகளில் இருந்து ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் நிதிய மைச்சர் ரவி கருணாநாயக்க உட்பட 10 பேரை விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்றின் சிறப்பு ட்ரயல் அட்பார் நீதிமன்ற நீதிபதிகளான அமல் ரணராஜா, நாமல் பலல்லே மற்றும் ஆதித்ய படபெந்திகே ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழு நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டது.

மத்திய வங்கியில் 2016 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி நடத்தப்பட்ட மூன்றாவது பிணை முறிகள் ஏலத்தின் போது இடம்பெற்ற மோசடி ஊடாக 15 பில்லியன் ரூபா அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தியமை தொடர்பில் 22 குற்றச்சாட்டுக்களின் கீழ் இந்த வழக்கு இந்த 10 பேருக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்குக்கு பூர்வாங்க ஆட்சேபனையை முன்வைத்த பிரதிவாதி தரப்பு சட்டத்தரணிகள், பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை தொடர முடியாத காரணத்தினால் அவர்களை குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்குமாறு நீதிமன்றில் கோரியிருந்தனர்.

அதனடிப்படையில் குறித்த 11 குற்றச்சாட்டுக்கள் மீது தொடர்ந்து வழக்கு நடத்த முடியாததால் அவற்றில் இருந்து பிரதிவாதிகளை விடுதலை செய்வதாக மூவரடங்கிய நீதிபதிகள் குழு நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டது.

அத்துடன் குறித்த வழக்கை ஜனவரி மாதம் 26 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# ஆர்ப்பாட்டத்தில் இன்னும் அதிக உறுப்பினர்களை ஈடுபடுத்த வேண்டும்

### -எதிர்க்கட்சியினருக்கு பிரதமர் மஹிந்த அறிவுரை-



பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு கோரி பாராளுமன்ற வளாக நுழைவாயிலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்திக்கு சென்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்று முற்பகல் அவர்களுடன் சுமூகமான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

ஆர்ப்பாட்டமொன்றை ஏற்பாடு செய்யும் போது இதனைவிட அதிகளவிலான உறுப்பினர்களை ஈடுபடுத்த வேண்டும் என பிரதமர் இதன்போது ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

வரலாற்றில் தன்னுடன் இணைந்து அரசியல் போராட்டங்களில் ஈடுபட்ட உறுப்பினர்களை பார்த்த பிரதமர், கடந்த காலங்களில் இவ்வாறான போராட்டங்களில் ஈடுபட்ட விதம் குறித்து அவர்களுடன் நினைவுகளை பகிர்ந்துக்கொண்டு அவ்விடத்திலிருந்து விலகிச் சென்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன, இம்தியாஸ் பாகிர் மாகர், பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட பலர் இவ்வாறு பிரதமருடன் சுமூகமான கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

# பக்கச்சார்பான சபாநாயகர் எதிர்க்கட்சி குற்றச்சாட்டு



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

சபாநாயகரின் செயற்பாடுகள் பக்கச்சார்பானதாகவே இருக்கின்றது என்றும், அவர் இன்னும் பொதுஜன பெரமுனவின் வெலிகம தொகுதி தலைவரைப் போன்றே நடந்துகொள்கின்றார் என்றும் எதிர்க்கட்சி பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டின் அதிகாரம் அரசாங்கத்தை விட்டுச் செல்வதை போன்று பாராளுமன்றத்தின் அதிகாரம் சபாநாயகரை விட்டுச் செல்வதாகவும் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் சபை நடவடிக்கைகளை புறக்கணித்து போராட்டங்களை நடத்தி வரும் நிலையில், அது தொடர்பில் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டே லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சபாநாயகரினால் புதிய சம்பிரதாயமொன்று முன்வைக்கப்பட்டது. அதாவது பாராளுமன்றத்தை வழிநடத்தும் பொறுப்பு ஆளும் கட்சி பிரதம கொரடா மற்றும் சபை முதல்வர் மற்றும் எதிர்க்கட்சியின் பிரதம கொரடாவுக்கும் உரியது என்று கூறியுள்ளார். இதனை கேட்டதும் நாம் ஆச்சரியமடைந்தோம். பிரித்தானியா பாராளுமன்ற சம்பிரதாயப்படி பாராளுமன்றத்தை சபாநாயகரோ அல்லது சபாபீடத்திற்கு தலைமை தாங்கும் உறுப்பினரே வழிநடத்த வேண்டும்.

அதேபோன்று சபாநாயகரின் மேசைக்கு பின்பக்கமாக எம்.பிக்கள் 10 பேர் வரையில் எதிர்க்கட்சியை நோக்கி வந்து மனுஷ நாணயக்காரவை தள்ளிவிட்டு தாக்குதல் நடத்துவதற்கு முயற்சித்தமை தொடர்பில் சபாநாயகர் ஒரு வசனமேனும் கதைக்கவில்லை. எம்.பிக்களின் பாதுகாப்பை எப்படி வழங்குவது என்பது தொடர்பில் அவர் எதனையும் கூறவில்லை. மேலும் சபா பீடத்திற்கு வெளியே எதிர்க்கட்சியின் பக்கத்திற்கு வந்து தாக்குதல் நடத்த முயன்றமை தொடர்பிலும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கதைக்கவில்லை. இதன்மூலம் சபாநாயகர் பக்கச் சார்பாக செயற்படுகின்றார் என்பது தெளிவாகின்றது.

பாராளுமன்ற சம்பிரதாயப்படி சபாநாயகரானதும் அவர் கட்சியின் பதவிகளை கைவிட வேண்டும். ஆனால் இந்த சபாநாயகர் இன்னும் பொதுஜன பெரமுனவின் வெலிகம தொகுதி தலைவரைப் போன்றே நடந்துகொள்கின்றார்.

பாராளுமன்ற சபா பீடத்திற்குள் சபாநாயகரின் கண்முன்னேயே நடக்கும் சம்பவங்கள் தொடர்பில் தீர்வுகளை வழங்காது, இது தொடர்பில் அறிக்கை சமர்பிக்க குழுவை நியமிப்பது வேடிக்கையானது.

அனைத்து விடயங்களையும் பார்க்கும் போது இன்று நாட்டின் ஆட்சி அதிகாரம் அரசாங்கத்தை விட்டுச் சென்றுள்ளதை போன்று, பாராளுமன்றத்தின் அதிகாரம் சபாநாயகரிடம் இருந்து இல்லாது போயுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தானில்இடம் பெற்ற படுகொலை கொடூரச் செயலாகும்

### -பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்-

பாகிஸ்தானில் இடம்பெற்ற இந்த படுகொலையானது மிக மோசமான கொடூரச் செயலாகும் என அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த செயலை முழு அரசாங்கமும், முழு பாகிஸ்தான் மக்களும் இந்த கொலையை கண்டிப்பதாக பாகிஸ்தானிய பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சு எமக்கு அறிவித்துள்ளது. பிரியந்த குமார 11 வருடங்கள் பாகிஸ்தானில் பணியாற்றி வந்துள்ளதுடன், கடந்த 9 வருடங்களாக அவர் படுகொலை செய்யப்பட்ட சியால்கோட் நகரிலேயே வசித்து வந்துள்ளார்.

அவருக்கு எதிராக எந்தவொரு குற்றச்சாட்டும், முறைப்பாடுகளும் பதிவாகியிருக்கவில்லை அத்துடன், எந்தவொரு ஒரு கடவுளுக்கு எதிராக எவ்வித கருத்துக்களையும் அவர் வெளியிட்டிருக்கவில்லை அவ்வாறு குறிப்பிடுவது பொய்யான குற்றச்சாட்டாகும். இந்த கொலையுடன் தொடர்புடைய அனைவருக்கும் எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பாகிஸ்தானிய அரசு தெரிவித்துள்ளது.

அவர்களுக்கு எதிராக குற்றவியல் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அறிவித்துள்ளதுடன், உடனடியாக 120 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த 120 பேரில் 13 பேர் மிக முக்கிய சந்தேகநபர்கள் எனவும் அவர்களுக்கு எதிராக சட்டத்தின் ஊடாக கொடுக்ககூடிய உச்ச தண்டனை வழங்கப்படும் எனவும் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் மற்றும் ஜனாதிபதி ஆகியோர் தன்னிடம் தொலைபேசி ஊடாக உறுதியளித்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

# சபாநாயகரை தாக்க இடமளிக்க மாட்டோம்

### -அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ-



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

நாங்கள் இருக்கும் வரையில் சபாநாயகர் மீது தாக்குதல் நடத்துவதற்கு எவருக்கும் இடமளிக்க மாட்டோம் என்று ஆளும் கட்சி பிரதம கொரடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை, ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் சபை முதல்வர் தினேஸ் குணவர்தன கூறுகையில்,

சபாநாயகரின் கட்டளைகளை இந்த பாராளுமன்றத்தில் அமைக்க வேண்டும். அதன்படியே நாங்கள் செயற்பட வேண்டும். இதன்படி சபாநாயகரிடம் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் சபாநாயகரிடமே உள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நாடு முழுவதும் மின்தடை ஏற்பட்ட போது, பாராளுமன்றத்தில் மின்சாரம் தடைபட்டது. இது தொடர்பாக ஆராயப்பட வேண்டும். பாராளுமன்ற நடவடிக்கைகளை ஸ்தம்பிதமடையச் செய்ய முயற்சிக்கப்பட்டதா என்று ஆராய வேண்டும் என்றார்.

இதேவேளை ஆளும் கட்சி உறுப்பினர் முசம்மில் கூறுகையில், பாராளுமன்றத்தில் சபைக்குள் பாதுகாப்பு இல்லை என்று கூறும் எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தின் உணவகத்தில் இருக்கின்றனர். அங்கு பாதுகாப்பு இருக்கின்றதென்றால் எப்படி இங்கே இல்லாது போகும். இவர்கள் இதனை பயன்படுத்தி சர்வதேசத்திற்கு காட்டவும், அவர்களின் அரசியலை முன்னெடுக்கவும் இவ்வாறு செய்கின்றனர் என்றார்.

இதனை தொடர்ந்து ஆளும் கட்சி பிரதம கொரடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறுகையில்,

இந்த பாராளுமன்றத்திற்கு கத்தி கொண்டு வந்து எம்.பிக்களை கொல்ல முயன்ற வரலாறும் இருக்கின்றது. சபாநாயகரின் ஆசனத்திற்கு பின்னால் வந்து அவ்வாறு செய்தனர். அப்போது புத்தகங்கள், நாற்காலிகள் மூலம் தாக்கிக் கொண்டனர். இந்த வரலாறு இருந்தது. ஆனால் அப்போது அது தொடர்பான விசாரணையை இறுதியில் நிறுத்த வேண்டியிருந்தது.

இந்நிலையில் மனுஷ நாணயக்கார உரையாற்றுகையில் 5 மணியாகியிருந்தது. இதன்போது நேரம் முடிந்துள்ளது. அதன்படி ஆளும் கட்சி பிரதம கொரடா என்ற ரீதியில் நான் நியாயத்தை கூறினேன். ஆனால் அவர் சபாநாயகரை நோக்கி பொருத்தமில்லாத வசனத்தை மேற்கொண்டு சபாநாயகரை நோக்கி தாக்குவதற்கு சென்றுள்ளார். நாங்கள் இருக்கும் வரையில் சபாநாயகரை தாக்குதவற்கு இடமளிக்க மாட்டோம்.

இதனால் உங்களை அச்சுறுத்தி உங்களை தாக்க வந்த எம்பிக்கு எதிராக எமது எம்.பிக்கள் 30 பேருக்கும் அதிகமானோர் கடிதமொன்றை வழங்கியுள்ளனர். அது தொடர்பாக விசாரணை நடத்தமாறு கேட்கின்றோம் அதற்கு நாங்கள் எதிர்ப்பு அல்ல என்றார்.

# எதிர்க்கட்சியினருக்கு அச்சுறுத்தல் உடனடியாக தீர்வு வேண்டும்

### -சபாநாயகரிடம் அனுரகுமார வலியுறுத்து

பா.கிருபாகரன். ந.ஜெயகாந்தன்

பாராளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவர் சுதந்திரமாக கருத்துக்களை முன்வைத்த பின்னர், அவரை தாக்க முயற்சிப்பதை அனுமதிக்க முடியாது என்றும், எதிர்க்கட்சியினருக்கு எதிரான அச்சுறுத்தல் குறித்து உடனடியாக தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்றும் ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று திங்கட்கிழமை சபை நடவடிக்கைகளை புறக்கணித்திருந்த நிலையில், அது குறித்து சபையில் ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றும் போதே அனுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெறவிருந்த நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, சுற்றுலாத்துறை அமைச்சு, நகர அபிவிருத்தி கழிவுப்பொருட்களை அகற்றுதல் மற்றும் சமுதாய துப்புரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு,தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சு ,கரையோர பாதுகாப்பு மற்றும் தாழ் நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு, விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தை நடத்த இணங்கியிருந்த நிலையில் பிரதான எதிர்க்கட்சியினர் சபை அமர்வுகளை புறக்கணித்த காரணத்தினால் விவாதம் கைவிடப்பட்டது.

இந்நிலையில் எதிர்க்கட்சியினரின் நியாயமான கோரிக்கை குறித்து சபையில் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பி கருத்துக்களை முன்வைத்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் (ஜே.வி.பி) அனுரகுமார திசாநாயக கூறுகையில்,

பாராளுமன்றத்தில் நடந்து கொள்ளும் விதம், உரையாற்றும் முறைமை, முரண்பாடுகள் ஏற்படும் விடயங்கள் குறித்து கட்சி தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்த நிலைமையில் பிரதான எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்றைய தினம் சபை அமர்வுகளில் பங்கேற்கவில்லை.

அது குறித்து முறையான அறிவிப்பொன்றையும் அதற்கான காரணத்தையும் சபாநாயகரிடம் முன்வைத்துள்ளனர். எதிர்க்கட்சி உறுப்பினரான மனுஷ நாணயக்கார, தனக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் குறித்தும் அவரை தாக்க எடுத்த முயற்சி குறித்தும் முறையிட்டுள்ளார். அவர் பாராளுமன்றத்தை விட்டு வெளியில் செல்ல ஒளிந்து, வெவ்வேறு முறைமைகளை கையாண்டு, தாக்கப்படுவோம் என்ற அச்சத்திலேயே வெளியேற நேர்ந்துள்ளது.

ஏதேனும் ஒரு விடயத்தை உரையாற்றிய பின்னர் அவர்களை தாக்க முயற்சிப்பதென்றால், அவர்கள் ஒளிந்து இரகசியமாக பாராளுமன்றத்தை விட்டு வெளியேற நேர்கின்றது என்றால், சபையை விட்டு வெளியேற சபாநாயகர் செல்லும் கதவை பயன்படுத்த வேண்டியுள்ளது என்றால், தமது வாகனங்களை விட்டு வேறு வாகனங்களில் வெளியேற நேர்ந்துள்ளது என்றால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பான சூழல் இல்லை என்பதும், அவர்கள் நிலைமை அச்சுறுத்தலில் உள்ளது என்பதையுமே இது வெளிப்படுத்துகின்றது.

உண்மையில் என்ன நடந்தது என்பது சபாநாயகருக்கு தெரியும், ஆதாரங்கள் வேண்டும் என்றால் காணொளிகள் உள்ளன அவற்றை பார்க்க முடியும், சபாநாயகர் இதனை ஏன் முன்னெடுக்கவில்லை.என்றார்.

# சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களின் பிரச்சினைகளுக்கு பிரதமர் தீர்வு

சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்து செல்லும்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளங்கண்டு அவர்களுக்கு துரித தீர்வினை பெற்றுக் கொடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நேற்று ஆலோசனை வழங்கினார்.

பாராளுமன்ற வளாகத்தின் குழு அறை 07 இல் வர்த்தக பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொற்று நிலைமைக்கு மத்தியில் பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளுக்கு முகங்கொடுத்த வர்த்தகர்களுக்கு மேலும் கடன் நிவாரண காலத்தை பெற்றுக்கொள்ளல் மற்றும் ஏலம் விடப்பட்ட சொத்துக்களை மீளப்பெறல் தொடர்பில் இதன்போது வர்த்தகர்கள் பிரதமருக்கு தெளிவுபடுத்தினர். பொருட்களின் விலையில் அடிக்கடி ஏற்படும் விலை ஏற்ற இறக்கங்கள் மற்றும் அதனூடாக மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத்தில் ஏற்படும் தாக்கம் மற்றும் வர்த்தகர்களின் வரையறை வரம்பற்ற விலை உயர்விலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பது குறித்தும் பிரதமர் கவனம் செலுத்தினார்.

சுற்றுலாத்துறை, வெதுப்பகத் தொழில், பூஞ்செடி விற்பனை, வாகனப் உதிரிப் பாகங்கள் இறக்குமதி, ஆடை மற்றும் மாணிக்கக்கல் வர்த்தகம், உலோகப் பொருட்கள் உற்பத்தி மற்றும் மெனிங் சந்தை பிரச்சினை மற்றும் கட்டுமானத் தொழிற்துறை ஆகியவற்றை பாதித்துள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் வர்த்தகர்கள் இதன்போது கருத்துகளை முன்வைத்தனர்.

குறித்த பிரச்சினைகளுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்குமாறு பிரதமர் அச்சந்தர்ப்பத்திலேயே அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுசென்றார்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணுலகில் 02 * 02 * 1951



விண்ணுலகில் 07 * 11 * 2021

அமரர்

**வேலுப்பிள்ளை சிவயோகன்**

(ஓய்வுநிலை பொறியியலாளர்)

முன்னாள் கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்

கடந்த 07.11.2021 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (07.12.2021) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

'ஆயர் பாடி'
துன்னாலை மத்தி
கரவெட்டி

குடும்பத்தினர்.
0772299939
0773433994

-வான்கடே டெஸ்ட் போட்டி-

# 372 ஓட்டங்களால் இந்தியா நியூசி. அணியை வென்றது






அஷ்வின், ஜயந்த் யாதவ் தலா நான்கு விக்கெட் வீழ்த்த நியூசிலாந்து அணி 2 ஆவது இன்னிங்சில் 167 ஓட்டங்களில் சுருட்டி 372 ஓட்டங்களால் நியூசிலாந்து அணியை வென்று தொடரை கைப்பற்றியது இந்தியா.

இந்தியா- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டம் செய்த இந்தியா 325 ஓட்டங்கள் குவித்தது. பின்னர் நியூசிலாந்து அணி 62 ஓட்டங்களில் சுருண்டது. 263 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்தாலும் இந்தியா பாலோ-ஒன் கொடுக்காமல் 2 ஆவது இன்னிங்சை தொடங்கியது.

7 விக்கெட் இழப்பிற்கு 276 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில், 2 ஆவது இன்னிங்சை டிக்ளேர் செய்தது. மொத்தமாக 539 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. நியூசிலாந்துக்கு 540 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. மிகப்பெரிய இலக்கை நோக்கி நியூசிலாந்து களம் இறங்கியது. நேற்று முன்தினம் 3 ஆவது நாள் ஆட்ட முடிவில் நியூசிலாந்து 5 விக்கெட் இழப்பிற்கு 140 ஓட்டங்கள் எடுத்திருந்தது. நிக்கோல்ஸ் 36 ஓட்டங்களுடனும், ரச்சின் ரவீந்திரா 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.


நேற்று 4 ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. நிக்கோல்ஸ் 44 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஜேமிசன் (0), டிம் சவுத்தி (0), சோமர்வில் (1) அடுத்தடுத்து ஆட்டமிழக்கவும், ரவீந்திரா 18 ஓட்டத்தில் வெளியேறவும் நியூசிலாந்து 167 ஓட்டத்தில் சுருண்டது.

இதனால் இந்தியா 372 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்திய அணி சார்பில் அஷ்வின், ஜயந்த் யாதவ் ஆகியோர் தலா 4 விக்கெட் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா 2 போட்டிகள் கொண்ட தொடரை 1-0 எனக் கைப்பற்றியது.

-லங்கா பிரிமீயர் கிரிக்கெட்-

## கண்டி வோரியர்ஸை 20 ஓட்டத்தால் வீழ்த்தியது தம்புள்ளை ஜெயன்ட்ஸ்



2021 லங்கா பிரீமியர் லீக் ரி-20 தொடரில் கண்டி வோரியர்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் தம்புள்ளை ஜெயன்ட்ஸ் அணி 20 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

லங்கா பிரீமியர் லீக் தொடரில் நேற்று மாலை 3 மணிக்கு ஆரம்பமான போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தசுன் சானக்க தலைமையிலான தம்புள்ளை ஜெயன்ட்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடியது.

அதன்படி அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி 7 விக்கெட் இழப்புக்கு 190 ஓட்டங்களை குவித்தது.

முதல் விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த நிரோஷன் திக்வெல்ல - பிலிப் சால்ட் ஆகியோர் 97 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர்.

பின்னர் திக்வெல்ல 37 ஓட்டங்களுடனும், சால்ட் 27 பந்துகளில் 5 சிக்ஸர், 4 பவுண்டரிகள் அடங்கலாக 64 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அவர்களுக்கு அடுத்தபடியாக தசுன் சானக்க 24 ஓட்டங்களையும், ரமேஷ் மெண்டிஸ் 22 ஓட்டங்களையும் அதிகப்படியாக பெற்றனர்.

பந்து வீச்சில் கண்டி வோரியர்ஸ் சார்பில் லஹிரு குமார நான்கு ஓவர்களில் 34 ஓட்டங்களை வழங்கி 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

அல் அமீன் 2 விக்கெட்டுகளையும், சசிந்து கொலம்பகே மற்றும் ரோவ்மேன் பவுல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இதன் பின்னர் 191 என்ற கடினமான இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அஞ்சலோ பெரேரா தலைமையிலான கண்டி வோரிஸர்ஸ் அணியினரால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 170 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது.


அணி சார்பில் அதிகப்படியாக ரோவ்மேன் பவுல் 42 ஓட்டங்களையும், சசிந்து கொலம்பகே 27 ஓட்டங்களையும் மற்றும் அஞ்சலோ பெரேரா 24 ஓட்டங்களையும் அதிகப்படியாக பெற்றனர்.

பந்து வீச்சில் தம்புள்ளை ஜெய்ன்ட் சார்பில் நுவான் பிரதீப் மற்றும் ரமேஷ் மெண்டிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், இம்ரான் தாகீர், தசுன் சானக்க ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதன் மூலம் தம்புள்ளை அணி 20 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

## இளையோர் பரா விளையாட்டு இலங்கைக்கு இரண்டு தங்கம்





பஹ்ரெயினில் நடைபெற்ற ஆசிய இளையோர் பரா விளையாட்டு விழாவில் இலங்கைக்கு 2 தங்கம், 4 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்கள் கிடைத்துள்ளன.

இதன் மூலம் ஆசிய இளையோர் பரா விளையாட்டு விழாவில் இலங்கை அதிசிறந்த பெறுதியைப் பதிவு செய்துள்ளது.

பெண்களுக்கான பரா நீச்சல் போட்டியில் பங்குபற்றிய இலங்கையின் 16 வயதுடைய கலினா பஸ்நாயக்க 2 தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றெடுத்தார்.

100 மீற்றர் சாதாரண நீச்சல் (1 நி. 12.09 செக்.), 400 மீற்றர் சாதாரண நீச்சல் (5:25.24) ஆகிய போட்டிகளில் தங்கப் பதக்கங்களை சுவீகரித்த கலினா, 100 மீற்றர் வண்ணத்துப்பூச்சி வகை நீச்சலில் (1:32.86) வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

ஆண்களுக்கான 400 மீற்றர் சாதாரண நீச்சலில் (5:20.59) வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

பரா மெய்வல்லுநர் போட்டியில் ஆண்கள் பிரிவில் பங்குற்றிய 4 அடி, 1 அங்குலம் உயரம் கொண்ட ஷேசன் ஜயவர்தன, குண்டு எறிதல் நிகழ்ச்சியிலும் (6.64 மீற்றர்), தட்டெறிதல் நிகழ்ச்சியிலும் (13.84 மீற்றர்) 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றெடுத்தார். ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் சப்ரான் மொஹமத் (13.39 செக்.) வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

பெண்களுக்கான 100 மீற்றர் (13.88 செக்.), 200 மீற்றர் (29.36 செக்.), நீளம் பாய்தல் (4.38 மீற்றர்) ஆகிய நிகழ்ச்சிகளில் ஜனனி விக்ரமசிங்க 3 வெண்கலப் பதக்கங்களை வென்றெடுத்தார்.

## 10 விக்கெட் கைப்பற்றிய பட்டேலுக்கு சிறப்புப் பரிசு



வான்கடே டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியின் 10 விக்கெட்டுகளை கைப்பற்றிய நியூசிலாந்து வீரர் அஜாஸ் படேலுக்கு மும்பை கிரிக்கெட் சங்கம் சார்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

இந்தியா- நியூசிலாந்து அணிகளுக்கு இடையே மும்பையில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சில் இந்தியாவின் 10 விக்கெட்டுகளையும் நியூசிலாந்து சுழற்பந்து வீரர் அஜாஸ் பட்டேல் கைப்பற்றியிருந்தார்.

மேலும், 2 ஆவது இன்னிங்சில் 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதன் மூலம் இந்தியாவிற்கு எதிராக ஒரு டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட் கைப்பற்றிய முதல் வீரர் என்ற சாதனையும் படைத்துள்ளார்.

இந்நிலையில் மும்பை கிரிக்கெட் சங்கம் சார்பில் அவருக்கு நேற்று பாராட்டு தெரிவிக்கப்பட்டது. 2 ஆவது டெஸ்ட் போட்டியின் முடிவில் வான்கடே மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அஜாஸ் படேலுக்கு மும்பை கிரிக்கெட் சங்கத் தலைவர் விஜய் பாட்டீல் பாராட்டு தெரிவித்தார். மேலும், இந்த போட்டியின் முதன் இன்னிங்ஸ் அதிகாரபூர்வ ஸ்கோர் ஷீட்டையும் அவர் வழங்கினார். அப்போது கிரிக்கெட் பந்து மற்றும் விளையாட்டின்போது அவர் பயன்படுத்திய டீசர்ட் ஆகியவற்றை மும்பை கிரிக்கெட் சங்க அருங்காட்சியகத்திற்கு அஜாஸ் பட்டேல் வழங்கினார்.

## ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசை இந்தியா மீண்டும் முதலிடம்

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர் இந்தியா 1-0 எனக் கைப்பற்றியதன் மூலம், ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் இந்தியா முதல் இடத்திற்கு முன்னேறியுள்ளது.

டெஸ்ட் தொடரில் நியூசிலாந்து அணி கடந்த ஜூன் மாதம் இங்கிலாந்துக்கு எதிராக இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் வென்றது.


இதன் மூலம் அந்த அணி ஐ.சி.சி. டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசை பட்டியலில் முதலிடம் பிடித்தது. மேலும், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவை நியூசிலாந்து வென்றதன் மூலம், இந்திய அணி டெஸ்ட் தரவரிசையில் 2 ஆவது இடத்தில் நீடித்து வந்தது.

இந்த நிலையில் மும்பையில் நடைபெற்ற நியூசிலாந்து அணிக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 372 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசை பட்டியலில் 124 புள்ளிகளுடன் இந்திய அணி முதலிடம் பிடித்தது. 121 புள்ளிகளுடன் நியூசிலாந்து அணி 2-ஆவது இடத்திலும், 108 புள்ளிகளுடன் அவுஸ்திரேலியா 3 ஆவது இடத்திலும் உள்ளன.

-டேவிஸ் கிண்ண டென்னிஸ்-

## 15 ஆண்டுகளுக்கு பிறகு ரஷ்யா அணி சம்பியனானது




ரஷ்யா அணி 15 ஆண்டுகளுக்கு பிறகு டேவிஸ் கிண்ணத்தை வென்று உள்ளது. ஒட்டு மொத்தத்தில் அந்த அணி 3 ஆவது முறையாக பட்டம் பெற்று உள்ளது.

டேவிஸ் கிண்ண டென்னிஸ் போட்டி கடந்த 25 ஆம் திகதி தொடங்கியது. 18 நாடுகள் பங்கேற்ற இந்த போட்டியின் இறுதி ஆட்டம் ஸ்பெயினில் உள்ள மாட்ரிட்டில் நடந்தது.

ரஷ்யா-குரோஷியா அணிகள் இறுதிப்போட்டியில் மோதின. இதில் ரஷ்யா 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று டேவிஸ் கிண்ணத்தை கைப்பற்றியது.

2 ஆவது ஒற்றையர் ஆட்டத்தில் டேனில் மெட்வதேவ் (ரஷ்யா) 7-6 (9-7), 6-2 என நேர் செட் கணக்கில் சிலிச்சை (குரோஷியா) வீழ்த்தினார். இதன்மூலம் ரஷ்யா சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

அந்த அணி 15 ஆண்டுகளுக்கு பிறகு டேவிஸ் கிண்ணத்தை வென்று உள்ளது. டேவிஸ் கிண்ணத்தை அதிகபட்சமாக அமெரிக்கா 32 முறை கைப்பற்றியது.

-இரு நாடுகள் தொடரில் அதிக விக்கெட்-

# ஹேட்லி சாதனையை சமன் செய்த அஸ்வின்




இரு நாடுகள் இடையேயான டெஸ்ட் தொடரில் நியூசிலாந்து வேகப்பந்து வீரர் ரிச்சர்டு ஹேட்லி அதிக விக்கெட் கைப்பற்றி இருந்தார்.

இந்தியா-நியூசிலாந்து அணிகள் இடையே 1956 ஆம் ஆண்டு முதல் டெஸ்ட் தொடர் நடைபெற்றது. இதுவரை 22 தொடர் முடிந்து உள்ளது. தற்போது 23 ஆவது தொடர் நடைபெற்று வருகிறது.

இரு நாடுகள் இடையேயான டெஸ்ட் தொடரில் நியூசிலாந்து வேகப்பந்து வீரர் ரிச்சர்டு ஹேட்லி அதிக விக்கெட் கைப்பற்றி இருந்தார். அவர் 14 டெஸ்டில் 24 இன்னிங்சில் 65 விக்கெட் வீழ்த்தி முதல் இடத்தில் இருந்தார்.

ஹேட்லியின் இந்த சாதனையை அஸ்வின் சமன் செய்தார். மும்பை டெஸ்டில் நேற்று அவர் 3 விக்கெட் கைப்பற்றினார். ரோஸ் டெய்லரை அவுட் செய்ததன் மூலம் அவர் இந்த சாதனையை சமன் செய்தார்.

அஸ்வின் 9 டெஸ்டில் 17 இன்னிங்சில் 65 விக்கெட்டை கைப்பற்றி உள்ளார். 59 ஓட்டம் கொடுத்து 7 விக்கெட் வீழ்த்தியது அவரது சிறந்த பந்து வீச்சாகும்.

மும்பை டெஸ்டில் முதல் இன்னிங்சில் அஸ்வின் 4 விக்கெட் வீழ்த்தி இருந்தார். கான்பூரில் நடந்த முதல் டெஸ்டில் 6 விக்கெட் கைப்பற்றி இருந்தார்.

அஸ்வின், ஹேட்லிக்கு அடுத்தபடியாக பிஷன்சிங் பெடி 57 விக்கெட்டும், பிரசன்னா 55 விக்கெட்டும், சவுத்தி 52 விக்கெட்டும் கைப்பற்றி உள்ளனர்.

## நடப்பு ஆண்டில் 50 இற்கும் அதிகமான விக்கெட்டுகள்

-அஷ்வின் அசத்தல் சாதனை-

நடப்பு ஆண்டில் அதிக விக்கெட் வீழ்த்திய முதல் 10 வீரர்கள் பட்டியலில் இந்திய வீரர் அக்சர் படேல் 4ஆவது இடத்திலும், முகமது சிராஜ் 9 ஆவது இடத்திலும் உள்ளனர்.

இந்தியா, நியூசிலாந்து அணிகள் மோதும் 2 ஆவது டெஸ்ட் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது. நியூசிலாந்து அணியின் முக்கியமான 3 விக்கெட்டுகளையும் இந்திய பந்துவீச்சாளர் அஷ்வின் வீழ்த்தினார். இதன்மூலம் நடப்பு ஆண்டில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 50 இற்கும் அதிகமான விக்கெட்டுகளை கைப்பற்றிய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். அஷ்வின் 81 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 426 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். அஷ்வின் நடப்பு ஆண்டில் 8 டெஸ்ட் போட்டிகளில் ஆடி இதுவரை 51 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். இவருக்கு அடுத்த இடத்தில் பாகிஸ்தான் வேகப் பந்துவீச்சாளர் ஷாகின் ஷா அப்ரிடி 44 விக்கெட்டுகளுடனும், 3ஆவது இடத்தில் பாகிஸ்தானின் ஹசன் அலி 39 விக்கெட்டுகளுடனும் நீடிக்கின்றனர்.

மேலும், டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள் பட்டியலில் ரவிச்சந்திரன் அஷ்வின் 12 ஆவது இடத்தில் உள்ளார்.




இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மக்கள் வங்கியால் 7.5 மில்லியன் பெறுமதியான ஸ்கானர் கையளிப்பு



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மக்கள் வங்கியினால் 7.5 மில்லியன் பெறுமதியான அல்ரா சவுண்ட் ஸ்கான் இயந்திரம் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

நேற்று காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் இந்த இயந்திரம் வைத்தியசாலையிடம் கையளிக்கப்பட்டது.

மக்கள் வங்கி ஊழியர்களின் பங்களிப்பில் ஏற்கனவே கொழும்பு போதனா வைத்தியசாலைக்கும் கண்டி போதனா வைத்தியசாலைக்கும் இந்த இயந்திரம் வழங்கப்பட்ட நிலையில் இன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும் இவ் இயந்திரம் வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் ரஞ்சித் கொடித்துவக்கு, யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூர்த்தி, பிரதிப்பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா உள்ளிட்ட வைத்தியர்கள், வங்கி அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

(40)


## சேவைநலன் பாராட்டு



திருமதி.
**திரேசா ஜெயவதி அன்ரன்**
(இ.ஆ.சே- 1)
சிரேஷ்ட ஆசிரியர்
யா/சென்.நோக்ஸ் றோ.க. வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

சேவை விபரம்
17.08.1988 -10.03.1991- யா/மிருசுவில் அ.த.க பாடசாலை
11.03.1991-20.01.1992- யா/ மிருசுவில் றோ.க.த.க வித்தியாலயம்
21.01.1992-31.12.1993- யா/ கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
03.01.1994-31.12.2008- யா/மிருசுவில் அ.த.க பாடசாலை
05.01.2009-06.12.2021- யா/சென்.நோக்ஸ் றோ.க. வித்தியாலயம்

கடமையும் கண்ணியமும் நிறைகுடமாய்
கட்டுப்பாடு மிக்க நல்லாசானாய்
கருத்துடன் கற்பித்து மகிழ்ந்தீர்!
ஓய்வு கால வாழ்வில் உடலுளம் நலமாய்
இறைவரம் பெற்று சீரும் சிறப்புமாய்
நூற்றாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்.


வாழ்த்துவோர்
அதிபர், ஆசிரியர்கள், ஊழியர், மாணவர்கள்
யா/சென்.நோக்ஸ்.றோ.க.வித்தியாலயம், யாழ்ப்பாணம்.


# இந்தியாவில் இருந்து வெளியேற இலங்கை நடிகைக்கு தடை

அ.தி.மு.கவின் இரட்டை இலை சின்னம் தொடர்பான லஞ்ச வழக்கில் கைது செய்யப்பட்ட சுகேஷ் சந்திரசேகர், சிறையில் இருந்தவாறே தொழிலதிபர் மனைவியை ஏமாற்றி, 200 கோடி ரூபாய் மோசடி செய்ததாக, டெல்லி பொருளாதார குற்றவியல் பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.அதன் அடிப்படையில் சுகேஷ் சந்திரசேகர் மற்றும் இந்த மோசடியில் தொடர்புடைய அவரது காதலிகள் மீது அமுலாக்கத்துறை பணமோசடி வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டது.இந்த வழக்கில் சுகேஷ் மற்றும் அவரது காதலியும் நடிகையுமான ஜாக்குலின் பெர்னாண்டஸ் உள்ளிட்டோருக்கு எதிராக அமுலாக்கத்துறை சார்பில் 7000 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதில், சுகேஷ் தனது காதலி ஜாக்குலின் பெர்னாண்டசுக்கு கொடுத்த ரூ.10 கோடி மதிப்புள்ள பரிசுகளில் 52 இலட்சம் மதிப்புள்ள குதிரையும் 9 இலட்சம் மதிப்புள்ள பாரசீக பூனையும் அடங்கும் என்று அமலாக்கத்துறை குறிப்பிட்டுள்ளது.

குற்றப்பத்திரிகையில் பெயர் சேர்க்கப்பட்டதையடுத்து ஜாக்குலின் நாட்டை விட்டு வெளியேறாமல் தடுக்கும் வகையில், அவருக்கு எதிராக லுக் அவுட் நோட்டீஸ் வெளியிட்டது. இந்நிலையில், நடிகை ஜாக்குலின் துபாய் செல்வதற்காக நேற்று முன்தினம் மும்பை விமான நிலையத்திற்கு வந்தார். துபாயில் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக புறப்பட்டார். ஆனால், லுக் அவுட்



நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டிருப்பதால், அவரை மும்பை விமான நிலையத்தில் உள்ள குடியேற்ற அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர்.சிறிது நேர விசாரணைக்குப் பிறகு அவர் விடுவிக்கப்பட்டார். மேலும் அவர் டெல்லியில் உள்ள அமுலாக்கத்துறை அலுவலகத்தில் ஆஜராக வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று டெல்லி அலுவலகத்தில் ஆஜராகுமாறு அமுலாக்கத்துறை புதிய சம்மன் அனுப்பவுள்ளது.


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி சந்தை, இறைச்சிக்கடைக்கான 01.01.2022-31.12.2022 வரையுள்ள காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2022.

1 கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :-07/12/2021 இல் இருந்து 20/12/2021ஆம் திகதி 3.00 மணி வரை

2 கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி:-21/12/2021 காலை 10.00 மணி வரை

3 கேள்விகள் திறக்கப்படும் திகதி:-21/12/2021காலை10.30 மணிக்கு.
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள்,இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் 27/10/2021ஆம் திகதி தினக்குரல், வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

4 கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப்பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

5 கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.

6 மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ இல | குத்தகை விபரம் | 2022 ஆகக் குறைந்த கேள்வி தொகை(வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (1%) | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 1 | உடுப்பிட்டி சந்தை | 1,175,842.50 | 11,758.43 | 500.00 | - |
| 2 | சாண்டா சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,716,855.00 | 17,168.55 | 500.00 | 100.00 |
| 3 | மண்டான் சந்தை | 49,611.45 | 496.11 | 500.00 | - |
| 4 | உடுப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக் கடை | 955,606.05 | 9,556.06 | 500.00 | 100.00 |

07/12/2021.

க.த.ஐங்கரன், தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு
பிரதேசசபை, கரவெட்டி.



## பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி 2022 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்கள்

பருத்தித்துறை பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், 01.01.2022 தொடக்கம் 31.12.2022 வரை குத்தகைக்கு வழங்குவதற்கும், சந்தைக்கடை வாடகைக்கு வழங்குவதற்காக கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

1. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 07.12.2021 தொடக்கம் 20.12.2021 பி.ப.1.00 மணி வரை
2. கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி :- 20.12.2021 மு.ப.10.00 மணி வரை
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 20.12.2021 மு.ப. 10.30 மணி
4. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- பருத்தித்துறை பிரதேசசபை தலைமை அலுவலகம்.

பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகளின் விபரம் :

| இல | சந்தைகள், இறைச்சிக்கடைகள் விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| புலோலி உப அலுவலகம் | | | | |
| 01 | மந்திகை பொதுச்சந்தை | 1000.00 | 5,000.00 | 2,346,250.00 |
| 02 | மானான்டி பொதுச்சந்தை | 1,000.00 | 3,000.00 | 328,350.00 |
| 03 | கற்கோவளம், புனிதநகர் பொதுச்சந்தை | 500.00 | 1,000.00 | 61,150.00 |
| 04 | கெருடாவில் பொதுச்சந்தை | 500.00 | 1,000.00 | 34,520.00 |
| 05 | மந்திகை சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 1,882,050.00 |
| 06 | மந்திகை சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 487,600.00 |
| 07 | மானான்டி கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 158,840.00 |
| குடத்தனை உப அலுவலகம் | | | | |
| 09 | மணற்காடு மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 313,500.00 |
| மருதங்கேணி உப அலுவலகம் | | | | |
| 09 | மருதங்கேணி பொதுச்சந்தை | 500.00 | 1,000.00 | 90,250.00 |
| 10 | மருதங்கேணி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 862,300.00 |
| 11 | மருதங்கேணி கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1,000.00 | 95,500.00 |

### பொதுவான நிபந்தனைகள்

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர், பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 20.12.2021 மு.ப.10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகவோ நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. கேள்விப்பத்திரம் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையைக் கொண்டு வருவதுடன் அதன் நிழற்படப்பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழையும் சமர்ப்பிக்கவேண்டும்.
2. ஆகக்குறைந்த கேள்வித்தொகையை விட குறைந்த கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
3. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
4. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
5. கேள்விப்பத்திரங்கள் மேற்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் பிரதேசசபையின் அந்தந்த உப அலுவலகங்களில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
6. தவறுநர் பட்டியலில் உள்ளவர்கள் இக்கேள்வி கோரலில் பங்குபற்ற முடியாது.
7. மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான நிபந்தனைகள்

1. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 24.12.2021 ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ள வேண்டும்.
2. இறைச்சிக்கடைகளுக்கு வருடாந்த உரிமத்தினை செலுத்த வேண்டும்.

அ.சா.அரியகுமார்,
தவிசாளர்,
பருத்தித்துறை பிரதேசசபை.

### எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவ விசாரணைகள்:

# குற்ற விசாரணைப்பிரிவிடம் ஒப்படைக்க ஏன் அரசு அஞ்சுகிறது முஜிபுர் கேள்வி

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் அண்மித்த வெடிப்பு சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை இதுவரையில் ஏன் குற்ற விசாரணைப் பிரிவிடம் ஒப்படைக்கவில்லை? என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வியெழுப்பினார்.

அத்தோடு அண்மையில் விநியோகிகப்பட்டு பின்னர் தடை விதிக்கப்பட்ட 18 லீற்றர் சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு என்ன ஆயிற்று என்று கேள்வியெழுப்பியுள்ள முஜிபுர் ரஹ்மான், அவற்றில் மேலும் 3 கிலோ எரிவாயு மீள் நிரப்பப்பட்டு சந்தைகளுக்கு விநியோகிக்கப்படுகிறா என்றும் தொடர்ச்சியாக கேள்வியெழுப்பினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு கேள்வியெழுப்பிய அவர் மேலும் குறிப்பிடுகையில் ,



நாட்டில் பதிவாகிக் கொண்டிருக்கும் சமையல் எரிவாயு சிலிண்டர் அண்மித்த வெடிப்பு சம்பவங்களுக்காக வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன பதவி விலகியிருக்க வேண்டும்.

தொடர்ந்தும் இவ்வாறான வெடிப்பு சம்பவங்கள் பதிவாகிக் கொண்டிருக்கின்ற போதிலும் , அது தொடர்பான விசாரணைகளை அரசாங்கம் ஏன் குற்ற விசாரணைப் பிரிவிடம் ஒப்படைக்கவில்லை?

அண்மையில் விநியோகிக்கப்பட்டு பின்னர் தடை விதிக்கப்பட்ட 18 லீற்றர் சிலிண்டர்கள் தற்போது எங்குள்ளன? அவை ஏன் மறைக்கப்பட்டுள்ளன? அந்த சிலிண்டர்களில் மேலும் 3 கிலோ கிராம் வாயு மீள் நிரப்பப்பட்டு 12.5 கிலோ சிலிண்டர்கள் விநியோகிகப்படுகின்றனவா? இந்த செயற்பாடுகளின் ஊடாக குற்றத்தை செய்வதற்கு இடமளித்துவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தமை தெளிவாகிறது.

எனவே இவை தொடர்பான விசாரணைகளை குற்ற புலனாய்வு திணைக்களத்திற்கு ஒப்படைத்து சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் இந்த குற்றத்தை செய்யத் தூண்டிய அரசியல்வாதிகளின் பெயர்கள் வெளிப்படுத்தப்பட்டு விடும் என்ற அச்சத்தின் காரணமாகவா அரசாங்கம் தயங்குகிறது? இவ்வாறான சூழலில் ஜனாதிபதியால் எவ்வாறு சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த முடியும். கனவில் மாத்திரமே ஜனாதிபதியால் அதனை செய்ய முடியும்.

லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனம் நிதி அமைச்சின் கீழ் காணப்படுவதாலா அந் நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாமலுள்ளது? அவ்வாறெனில் அரசாங்கமே தற்போது குற்றவாளிகளைப் போன்று செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. காரணம் லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் நிதி அமைச்சினாலேயே நியமிக்கப்படுகின்றனர்.

அதன் காரணமாகவா இந்த அதிகாரிகளும் லிட்ரோ நிறுவனமும் பாதுகாப்படுகிறது? உண்மையில் தற்போது அரசாங்கத்தின் தேவை இவர்களைப் பாதுகாப்பதா? அரசாங்கத்தின் உண்மையான முகம் வெளிப்படுத்தப்படும் என்ற அச்சத்தின் காரணமாகவா சட்டம் நடைமுறைப்படுத்தப்படாமலுள்ள? இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண வெடிப்பு சம்பவங்களுக்கு சமையல் எரிவாயு நிறுவனங்களே பொறுப்பு கூற வேண்டும் என்று தெரிவித்துள்ள போதிலும் , அந் நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளமையே தற்போதுள்ள பிரச்சினையாகும் என்றார்.

# பாகிஸ்தானில் பிரியந்தவை போல் என்னை கொன்றுவிடுவார்கள் என்றே பயந்தேன்

### மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



பாராளுமன்றத்தில் அச்சமின்றி உண்மைகளை துணிச்சலுடன் வெளிப்படுத்திய போது, ஆளும்கட்சி அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து என்னைத் தாக்க முயற்சித்து அச்சுறுத்திய போது, பாகிஸ்தானில் காட்டுமிராண்டித்தனமான அடிப்படைவாதிகளால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவே நினைவிற்கு வந்தார் என மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

பாராளுமன்றத்தில் மிகவும் ஆவேசத்துடன் அச்சுறுத்தல் விடுத்து வன்முறையில் ஈடுபட்ட ஆளும்கட்சி குண்டர்கள் பார்த்தபோது, அவர்கள் என்னை பாராளுமன்றத்திற்கு உள்ளோ அல்லது வெளியிலோ கொலை செய்துவிட்டு, ஜனநாயக வெளியில் அரசாங்கத்திற்கு எதிரான எனது குரலை அடக்க முயல்வார்கள் என்று கவலையடைந்தேன்.

பிள்ளைகள் உள்ள தந்தை என்ற முறையில், ஜனநாயகத்தின் மரபுகளை நாம் எதிர்கால சந்ததியினருக்குப் பெற்றுத் தருவோமா அல்லது மிருகத்தனமான ஆட்சியின் உதாரணங்களைச் கொண்டு சேர்ப்போமா என்ற கேள்வி என் மனதில் எழுந்தது.

எனது பன்னிரெண்டு வருட பாராளுமன்ற உறுப்பினர் வரலாற்றில் இவ்வாறான கொடூர வன்முறைக்கு முகங் கொடுத்தது இதுவே முதல் தடவையாகும். பாராளுமன்ற ஜனநாயகத்தை அழித்த ஐம்பத்தி இரண்டு நாள் ஆட்சிக் கவிழ்ப்பு சதியின் போது நடந்துகொண்டதை விட மிகக் கொடூரமாக நடந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகளை பார்க்கும் போது எமது உயிருக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலை குறைத்து மதிப்பிட முடியாது என்றார்.

## நாட்டை வந்தடைந்த மேலும் 1.34 மில்லியன் பைசர் தடுப்பூசிகள்

அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட பைசர் தடுப்பூசியின் மேலும் 1.34 மில்லியன் டோஸ்கள் நாட்டை வந்தடைந்துள்ளன.

3,782 கிலோ எடை கொண்ட இந்த அளவுகள் நெதர்லாந்தில் இருந்து டுபாய் வழியாக நேற்று முன்தினம் மாலை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

விமான நிலையத்தை வந்தடைந்த தடுப்பூசி அளவுகள், பின்னர் கொழும்பில் அமைந்துள்ள அரச மருந்தக்கல் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலைக்கு பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டது.

# மட்டு.சிவானந்தா பாடசாலை ஆசிரியர்கள் இன்று முதல் சுகவீன விடுமுறைப் போராட்டம்

### பாடசாலைக்கு முன்பாகவும் கவன ஈர்ப்பு போராட்டம்

மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலை ஆசிரியர்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் சுகவீன விடுமுறைப் போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

நேற்று முற்பகல் கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலைக்கு முன்பாக கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நேற்று காலை பாடசாலைக்கு முன்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது ஆசிரியர்கள் அச்சுறுத்தப்பட்டதுடன் அவமதிக்கப்பட்டதாகவும் தெரிவித்தே இந்தப் போராட்டத்தில் ஆசிரியர்கள் ஈடுபட்டனர்.

பாடசாலையின் அபிவிருத்திக்குழுவின் செயலாளர் தனது தனிப்பட்ட நலனுக்காக ஒரு சிலரை இணைத்துக்கொண்டு இந்த ஆர்ப்பாட்டத்தினை நடத்தியுள்ளதாகவும் ஆசிரியர்கள் இதன்போது தெரிவித்தனர்.

பாடசாலையின் அபிவிருத்திக்குழுவின் செயலாளரே தனிப்பட்ட நலனுக்காக பாடசாலையினை குழப்பாதே,குறித்த சில பெற்றோரிடமிருந்து கல்விசார் ஆளணியினரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்து.அரசியல் குப்பைகளை கல்விக்குள் புகுத்தாதே,ஆசிரியர் மீது கைவைக்க யார் அனுமதி தந்தது என்பன போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



ஒரு ஆசிரியர் மீது குற்றச்சாட்டுகள் இருக்குமானால் அதற்காக முறையான விசாரணைகளை நடத்தி அவருக்கான இடமாற்றத்தினை வழங்கும் வகையான சட்டதிட்டங்கள் இருக்கும்போது ஒட்டுமொத்த ஆசிரியர்களையும் மாணவர்களையும் வீதியிலிறக்க சிலரின் தனிப்பட்ட தேவைக்காக இந்தப் போராட்டம் நடத்தப்பட்டதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர். ஒரு சில பெற்றோரும் பாடசாலை அபிவிருத்திக்குழுவின் செயலாளர் உட்பட ஒரு சிலரே இந்த ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தாகவும் தெரிவித்தனர்.

ஆசிரியர்களுக்கு எந்தவித அறிவித்தல்களும் வழங்கப்படாமல் பாடசாலையினை மூடி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாகவும் ஆசிரியர்கள் உள்செல்ல அனுமதிக்கப்படவில்லையெனவும் மாணவர்கள் உள்செல்ல அனுமதிக்கப்படவில்லையெனவும் ஒரு ஆசிரியருக்காக முழு கல்வி சமூகமும் பாதிக்கப்படும் நிலையினை சிலர் ஏற்படுத்தியதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தமக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்,அநீதிகளுக்கு எதிரான முறையாக விசாரணை நடத்தி தீர்வு கிடைக்கும் வரையில் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் தாங்கள் சுகவீன விடுமுறை போராட்டத்தினை முன்னெடுக்கப்போவதாகவும் ஆசிரியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# ஆசிரியர் சேவையிலிருந்து இன்று ஓய்வு பெறுகிறார்

பட்டிருப்பு கல்வி வலயத்தில் உள்ள பெரியகல்லாறு விநாயகர் வித்தியாலயத்தில் பணியாற்றும் திருமதி. சுமதி ரவி இன்று 7 ஆம் திகதி தனது 60ஆவது வயதில் ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

05-03-1990 இல் ஆசிரிய நியமனம் பெற்ற இவர் பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியராவார். இது தவிர பட்டிருப்பு கல்வி வலயத்தில் முதன்மை உளவளத் துணையாளராகவும் பணியாற்றியவர். பெரியகல்லாறு புனித அருளானந்தர் வித்தியாலயத்தில் தனது ஆசிரியர் பணியை ஆரம்பித்த இவர் பெரியகல்லாறு உதயபுரம் தமிழ் வித்தியாலயம், துறைநீலாவணை மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) என்பவற்றில் பணியாற்றியுள்ளார்.

காலஞ்சென்ற அதிபர் குழந்தைவேல் - புஸ்பவதி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வியான இவர் டாக்டர் ரவியின் துணைவியாவார்.

## கிரான் ஆற்றில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்த இருவர் கைது



மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கிரான் பகுதியிலுள்ள ஆற்றில் சட்டவிரோதமாக ஆற்று மணல் அகழ்ந்து கனரக வாகனத்தில் ஏற்றிய இருவரை நேற்று திங்கட்கிழமை அதிகாலையில் கைது செய்ததுடன் இரண்டு கனரக வாகனங்களை மீட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கு அமைய குறித்த பகுதியை நேற்று அதிகாலை பொலிஸார் முற்றுகையிட்டனர். இதன் போது கனரக வாகனங்களில் சட்டவிரோதமாக ஆற்று மணல் ஏற்றிக் கொண்டிருந்த இருவரை கைது செய்ததுடன் கனரக வாகனங்களையும் கைப்பற்றினர்.

# மத்திய மாகாணத்தில் 11 மாதத்தில் 1048 டெங்கு தொற்றாளர்கள்

மத்திய மாகாணத்தில் மாத்தளை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் கடந்த 11 மாத காலத்திற்குள் 1048 டெங்கு தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக மத்திய மாகாண சுகாதார தொற்று நோய் பிரிவு அறிவிக்கின்றது.



மாத்தளை மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் 12 டெங்கு தொற்றாளர்களும் பெப்ரவரி மாதம் 05 தொற்றாளர்களும் மார்ச் மாதம் 11 தொற்றாளர்களும் ஏப்ரல் மாதம் 09 தொற்றாளர்களும் மே மாதம் 06 தொற்றாளர்களும் ஜூன் மாதம் 17 தொற்றாளர்களும் ஜூலை மாதம் 58 தொற்றாளர்களும் ஆகஸ்ட் மாதம் 33 தொற்றாளர்களும் செப்ரெம்பர் மாதம் 06 தொற்றாளர்களும் ஒக்ரோபர் மாதம் 31 தொற்றாளர்களும் நவம்பர் மாதம் 26 தொற்றாளர்களுமாக மொத்தம் 217 தொற்றாளர்களும்

கண்டி மாவட்டத்தில் ஜனவரி மாதம் 67 தொற்றாளர்களும்; பெப்ரவரி மாதம் 48 தொற்றாளர்களும் மார்ச் மாதம் 51 தொற்றாளர்களும் ஏப்ரல் மாதம் 90 தொற்றாளர்களும் மே மாதம் 37 தொற்றாளர்களும் ஜூன் மாதம் 40 தொற்றாளர்களும் ஜூலை மாதம் 129 தொற்றாளர்களும் ஆகஸ்ட் மாதம் 68 தொற்றாளர்களும் செப்ரெம்பர் மாதம் 32 தொற்றாளர்களும் ஒக்ரோபர் மாதம் 102 தொற்றாளர்களும் நவம்பர் மாதம் 115 தொற்றாளர்களுமாக மொத்தம் 779 தொற்றாளர்களும்

நுவரெலியா மாவட்டத்தில் ஜனவரி மாதம் 05 தொற்றாளர்களும் பெப்ரவரி மாதம் 01 தொற்றாளர் மார்ச் மாதம் 08 தொற்றாளர்களும் ஏப்ரல் மாதம் 09 தொற்றாளர்களும் மே மாதம் 04 தொற்றாளர்களும் ஜூன் மாதம் 03 தொற்றாளர்களும் ஜூலை மாதம் 05 தொற்றாளர்களும் ஆகஸ்ட் மாதம் 02 தொற்றாளர்களும் செப்ரெம்பர் மாதம் 03 தொற்றாளர்களும் ஒக்ரோபர் மாதம் 02 தொற்றாளர்களும் நவம்பர் மாதம் 10 தொற்றாளர்களுமாக மாதத்திற்குள் மொத்தம் 52 தொற்றாளர்களுமாக மொத்தம் கண்டி மாத்தளை நுவரெலியா ஆகிய 3 மாவட்டங்களிலும் மொத்தம் 1048 டெங்கு தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

2020 ஆண்டு டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்த போதும் 2021 ஆண்டு டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மத்திய மாகாணத்தில் குறைந்தளவே காணப்பட்டன.

# தோட்டத் தொழிலாளர் கொடுப்பனவுக்காக கொழும்பில் காணி விற்கவுள்ள அரசாங்கம்



தோட்டத் தொழிலாளர்களுக்குச் செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய கொடுப்பனவுகளுக்கு நிதியளிப்பதற்காக கொழும்பிலுள்ள காணி ஒன்றை விற்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

அண்மையில் புனரமைக்கப்பட்ட நாவலப்பிட்டி - கலபொட வீதியை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


தோட்டத் தொழிலாளர்களுக்கு 50 ஆண்டுகளாக ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் சேவைக் கால கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் அனைத்து தோட்டத் தொழிலாளர்களுக்கும் அதற்கான கொடுப்பனவுகளை வழங்குவேன். இந்தக் கொடுப்பனவுகளுக்கு நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக கொழும்பில் உள்ள காணி ஒன்றை விற்பதற்கு நான் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளேன் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தோட்டத் தொழிலாளர்கள் பல வருடங்களாக இந்த கொடுப்பனவுகள் இன்றி தோட்டங்களில் பணிபுரிந்து வருவதாக அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

இந்தக் கொடுப்பனவுகளைச் செய்ய முடியாவிட்டால் நமக்கு ஏன் அரசாங்கம் தேவை? எனக் கேள்வி எழுப்பிய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே, நான் தமிழ் சமூகத்திற்காக உழைக்க விரும்புகிறேன் என்று குறிப்பிட்டார்.

# ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இந்தியாவிற்கு விஜயம்

## -10 ஒப்பந்தங்கள் கையெழுத்தாக வாய்ப்பு-



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நேற்று திங்கட்கிழமை புதுடெல்லிக்கு விஜயம் செய்துள்ளார். இந்தப் பயணத்தின்போது, இரு நாடுகளுக்கு இடையே, 10 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன.

இந்திய- ரஷ்யா உச்சி மாநாடு புதடெல்லியில் நேற்று ஆரம்பமானது. இதில் பங்கேற்பதற்காக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், நேற்று புதுடெல்லிக்கு வருகை தந்துள்ளார். விமான நிலையத்திலிருந்து நேரடியாக மாநாடு நடைபெறும் ஹைதராபாத் இல்லத்திற்கு சென்ற அவரை, பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றார்.

பின்னர் இரு தலைவர்களும், தங்கள் நாட்டு உயர்மட்டக் குழுவினருடன், பரஸ்பரம் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். இதில், இரு நாட்டு இராணுவ மற்றும் வெளியுறவு அமைச்சர்களும், இடம்பெறுகின்றனர். இதைத்தொடர்ந்து, பிரதமர் மோடி- புடின் இடையேயான நேருக்கு நேர் சந்திப்பும் நடைபெற்றது.

இந்த உச்சி மாநாட்டின் இறுதியில், இரு நாடுகளுக்கிடையே 10 ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படுகின்றன. மேலும் இந்தப் பேச்சுவார்த்தைகள், விவாதங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் அடிப்படையில் கூட்டறிக்கையொன்றும், வெளியிடப்படுமென, புதுடெல்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மாநாடு நிறைவடைந்ததும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நாடு திரும்புகிறார். இந்த மாநாட்டிற்கு முன்னதாக, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரும், ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜெய் லவ்ரோவும் சந்திக்கிறார்கள். இதைப்போல இந்திய இராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் ரஷ்ய ராணுவ அமைச்சர் செர்ஜெய் ஷோய்குவும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

பின்னர் இந்த 4 அமைச்சர்களும் பங்கேற்கும், பேச்சுவார்த்தையும் நடைபெறவிருக்கின்றது. இந்தச் சந்திப்புகளில் பரஸ்பர, பிராந்திய மற்றும் சர்வதேச அரசியல் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து, இருநாட்டு அமைச்சர்களும் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக, வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

# அற்ப விடயத்திற்காக விபரீத முடிவினால் வாழ்க்கையைத் தொலைத்த பெண்

## -அநாதரவான கணவர் குழந்தைகள்-



ஹைதராபாத்திலுள்ள ஆம்பர்பேட்டையில் விஜயலட்சுமி, கணவர் ஸ்ரீநிவாஸ் உடன் வசித்து வந்தார். இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். ஸ்ரீநிவாஸ் வீடு, வீடாகச் சென்று, புடவைகள் மற்றும் ரவிக்கைப் பொருட்களை விற்று, வருமானம் மீட்டி வருகிறார்.மேலும், தையல்காரரான அவர், வீடுகளில் துணிகளை தையல் செய்தும் வாழ்வாதாரம் நடத்தி வருகிறார்.

இந்த நிலையில், கணவர் வெளியே சென்ற நிலையில், குழந்தைகளும் பள்ளிக்கு சென்றனர். பின்னர் மாலை வேளை, குழந்தைகள் பாடசாலை முடிந்து வீட்டிற்கத் திரும்பினர்.

அப்போது தாய் விஜயலட்சுமி இல்லாததைக் கண்டு பதற்றமடைந்தவர்கள், படுக்கையறைக் கதவு மூடப்பட்டிருப்பதைக் கண்டனர். தொடர்ந்து கதவைத் தட்டியபோதும், கதவு திறக்கப்படவில்லை. இது குறித்து அயலவர்களுக்கும் தகவல் தெரிவித்தனர். வியாபாரத்திற்குச் சென்றிருந்த கணவர் ஸ்ரீ நிவாஸுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அவர் வீட்டிற்கு விரைந்து சென்று பார்த்தபோது, கதவு உட்பக்கமாக பூட்டப்பட்டிருந்தது.

நீண்ட நேரம் தட்டிய போதும், கதவு திறக்கப்படாமையினால், அவர் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றார். அப்போது படுக்கையில் விஜயலட்சுமி பிணமாக கிடந்தது கண்டு, பெரும் அதிர்ச்சி அடைந்தார். உடனடியாக அப்பகுதி மக்கள் பொலிஸாக்குத் தகவல் வழங்கினர். அவர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, அவரது உடலை மீட்டனர். இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்தபோது, திடுக்கிடும் தகவல்கள்; வெளியாகின. அதாவது கணவர் தையல்காரர் என்பதனால், விஜயலட்சுமி அவரிடம் ரவிக்கை தைத்துக் கொடுக்கும்படி கேட்டுள்ளார். அதன்பேரில் கணவரும் ரவிக்கை தைத்துக் கொடுத்தார். ஆனால், அந்த ரவிக்கை, விஜயலட்சுமி விரும்பியதன் பேரில், அமையவில்லை.

ரவிக்கையை புதிதாகச் செய்து கொடும்படி, விஜயலட்சுமி கேட்டபோது, ஸ்ரீ நிவாஸ் மறுத்து விட்டார். இது தொடர்பாக கணவருக்கும், அவருக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து, விரக்தி அடைந்த விஜயலட்சுமி, தற்கொலை செய்து கொண்டது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கணவரும், இரு குழந்தைகளும் அநாதரவான நிலையில், பெரும் சோகத்துடன் உள்ளனர்.

# ஜெயலலிதாவின் சமாதியில் அணைந்து போன அணையா விளக்கு

## - அதிர்ச்சியில் தொண்டர்கள் -

சென்னை மெரினா கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா சமாதி அருகே அணையா விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவு தினமான, நேற்று முன்தினம் காலையில், அவரது சமாதியில் உள்ள அணையாத விளக்கு, திடீரென்று அணைந்து போனது. அ.தி.மு.க. நிர்வாகிகள் அஞ்சலி செலுத்த வந்த நேரத்தில், இந்த விளக்கு அணைந்து விட்டது. உடனடியாக அணைந்த விளக்கை மீண்டும் எரிய வைக்கும் முயற்சியில், பொதுப்பணித்துறை ஊழியர்கள் ஈடுபட்டனர். காற்றின் வேகம் அதிகரித்தமையினால், மீண்டும், மீண்டும் விளக்கு அணைந்து கொண்டே இருந்தது. இதனையடுத்து, அணையாத விளக்கின் மேல், காற்றுப் புகாதவாறு கண்ணாடிப் பேழையை வைத்தனர். இதன்பின்னர் அணையாத விளக்கு பிரகாசமாக எரிந்தது.

# இராணுவத் தலையீடுகள் குறித்த அமெரிக்க அணுமுறைகளில் மாற்றம்



தனது படைகளை பிற நாடுகளுக்கு அனுப்புவதில், அமெரிக்கா அதிக எச்சரிக்கையுடன் செயற்பட்டு வருவதாக, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அபுதாபியில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா பிற நாடுகளுக்கு தங்களது படைகளை அனுப்புவதில், எச்சரிக்கை காட்டுவதைப் பார்க்க முடிகின்றது. அத்துடன் தனது நீட்சியை சரிசெய்வதற்கு அந்நாடு மேற்கொள்ளும் முயற்சியையும் காணமுடிகின்றது. இது வெவ்வேறு வடிவங்களை எடுத்திருக்கலாம் அல்லது வெவ்வேறு வழிகளில், செயற்படுத்தப்பட்டிருக்கலாம்.

உள்நாட்டு முன்னேற்றத்திற்கும், வெளிநாடுகளுடன் உள்ள தனது கடமைக்கும் இடையிலான சமநிலையை, அமெரிக்கா மறு ஆய்வு செய்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளதாகவும், வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

# வளர்ப்பு நாய்க்கு ஜோராக நடந்த வளைகாப்பு நிகழ்வு



மதுரை-ஜெய்ஹிந்புரம் பகுதியைச் சேர்ந்த சக்திவேல். மதுரை மாநகர காவல்துறையில், பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டராக பணியாற்றி வருகின்றார். இந்த நிலையில், சக்திவேல் தனது வீட்டில் கடந்த 3 வருடங்களாக, சுஜி என்ற பெண் நாயை, செல்லமாக வளர்த்து வருகின்றார். சமீபத்தில், இந்த நாய் கருவுற்றதையடுத்து, வளைகாப்பு நடத்துவதற்கு குடும்பத்தினர் முடிவு செய்தனர். அதன்படி, அவர்களின் வளர்ப்பு நாயான சுஜிக்கு வளைகாப்பு நடத்தினர். அப்போது அருகில் வசிப்பவர்களையும் வளைகாப்பு நிகழ்ச்சிக்கு அழைத்தனர். வளைகாப்பில் பெண் நாய் சுஜிக்கு வளையல்கள், மாலை அணிவித்து, ஒரு பெண்ணுக்கு வளைகாப்பு நடத்துவது போல நடத்தினர்.

மேலும், 5 வகை உணவுகளையும் தயார் செய்து, அதனை வளர்ப்பு நாய் சுஜிக்கு வழங்கியுள்ளனர்வளைகாப்பு நிகழ்ச்சிக்கு வந்த அனைவருக்கும் வழங்கினர். வளர்ப்பு நாய் சுஜிக்கு நடத்திய வளைகாப்பு காணொளிகள், இணையத்தில், வேகமாகப் பரவி வருகின்றது.

# அம்பேத்கரின் கனவை நிச்சயம் அடைவோம்- ராகுல் காந்தி





இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய பி.ஆர்.அம்பேத்கரின் நினைவு நாள் நேற்று இந்தியாவில் அனுசரிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் பி.ஆர்.அம்பேத்கருக்கு மரியாதை செலுத்தினர்.

இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு ஆகியோர் பாராளுமன்ற வளாகத்திலுள்ள அம்பேத்கரின் உருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

அம்பேத்கர் நினைவு தினத்தை முன்னிட்டு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தனது டுவிட்டர் பதிவில் கூறும் போது, இன்று (நேற்று) பாபா சாகேப் அம்பேத்கரின் நினைவு தினம். நாட்டில் அதிகரித்து வரும் அநீதி, வன்முறை மற்றும் பாகுபாடுகளைப் பார்க்கும்போது, இன்னும் செய்ய வேண்டிய பணிகள் நிறைய இருப்பதாக நினைக்கின்றேன். பாபா சாகேப் அம்பேத்கரின் கனவு, இன்னும் வெகு தொலைவிலேயே உள்ளது. ஆனால், அதனை நாங்கள் விரைவில் அடைவோம்.

அவருக்கு எனது பணிவான அஞ்சலிகள் என, அவரது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## சிறுவிளம்பரங்கள்

### மணமகன் தேவை

1980. மட்டக்களப்பு கிறிஸ்தவ வேளாளர். Admin Officer. கொழும்பு. Divorced பதிவு #6348. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு. மற்றும் திருமணம் சரி வரும் போது தரகர் கூலி இல்லை. Appointments 076 6649 401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd., No.91 - 4/2, Galle Road, Bamabalapity, Colombo - 04.

### வேலைவாய்ப்பு

வவுனியாவில் இயங்கிவரும் பிரபல ஐஸ் கிறீம் கடை ஒன்றிற்கு ஆண் வேலையாட்கள் தேவை. 20 - 45 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு - 077 3788746
















# பதவி கவிழ்க்கப்பட்ட ஆங் சான் சூகிக்கு நான்கு வருட சிறைத் தண்டனை



மியான்மரில் இராணுவம் ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தியபோது,பதவியிலிருந்து அகற்றப்பட்ட ஆங் சான் சூகிக்கு, அந்நாட்டு நீதிமன்றம், நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

அரசிற்கு எதிராகப் போராட்டங்களைத் தூண்டியதாகவும், கொரோனா தடுப்பு விதிகளை மீறியதாகவும் அவர் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் அனைத்தும் நிருபணமாகியுள்ளதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி வின்மியின் ற்க்கும் இதே குற்றச்சாட்டுகளின் பேரில், நான்காண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த பிப்ரவரி மாதம் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட பின்பு, வீட்டுக் காவலில் ஆங் சான் சூகி வைக்கப்பட்டுள்ளார். அவர் சிறைக்கு அனுப்படுவாரா, அல்லது வீட்டுச் சிறையே தொடருமாவென, இன்னும் தெளிவாகவில்லை.ஆங் சான் சூகி மீது இராணுவ அரசு தொடுத்துள்ள பல வழக்குகள் இன்னும் நிலுவையிலுள்ளன. 76 வயதாகும் அவர் மீது ஊழல், அரசு இரகசியங்கள் பாதுகாப்புச் சட்டத்தை மீறியது உள்ளிட்ட, குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.


தென்கிழக்கு ஆசிய நாடான மியன்மாரில், கடந்த பெப்ரவரி முதலாம் திகதி ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு, ஆட்சி அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியது.

தேர்தல் முறைகேடு காரணமாகவே, ஆட்சியை கவிழ்த்ததாக விளக்கம் அளித்த இராணுவம், நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி, ஜனாதிபதி வின் மைன்ட் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்களை கைது செய்து, வீட்டு காவலில் வைத்தது.

இதனைத்தொடர்ந்து இராணுவ ஆட்சிக்கு எதிராகவும், ஆங் சான் சூகிக்கு ஆதரவாகவும் கிளர்ச்சிக் குழுவினர் மற்றும் பொதுமக்கள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையிலேயே, ஆங் சான் சூகிக்கு நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின்னர் இராணுவ ஆட்சிக்கு எதிராக போராடியமைக்காக, கைதான 5,600ற்கும் மேற்பட்டவர்களை, கடந்த ஒக்ரோபர் மாதம், இராணுவம் விடுவித்தமை, நினைவு கூரத்தக்கது.

# 77 வயது முதியவரை காதலித்துக் கரம்பிடிக்கும் 20 வயது இளம் பெண்



காதலுக்கு கண் இல்லை என்பார்கள். அதுபோலத் தான், மியான்மர் நாட்டின் காதல் சம்பவம் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது.

மியான்மரில் வசித்து வரும் 20 வயதான ஜோ என்ற இளம் மாணவி இங்கிலாந்தை சேர்ந்த 77 வயதான டேவிட் என்பவரைக் காதலித்து வருகிறார். இசையமைப்பாளராக இருக்கும் டேவிட்டிற்கு குழந்தைகள் இல்லாத நிலையில், இருவரும் கடந்த ஒன்றரை வருடங்களாக காதலித்து வருகின்றனர்.

57 வயது இடைவெளி இருக்கும் இவர்களுக்கிடையே, ஆயிரக்கணக்கான மைல் தூரம் இருந்தாலும், இவர்களின் காதல் மட்டும், நாளுக்கு நாள் அதிகரித்துகொண்டே, வருகிறதாம்.

ஜோ மற்றும் டேவிட் டேட்டிங் தளம் மூலம் தான், ஒருவரை ஒருவர் முதலில் சந்தித்துள்ளனர். டேட்டிங் தளத்தில் டேவிட்டை கண்டுபிடித்ததை, ஜோ தன்னைப் பற்றிய விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மியான்மர் மற்றும் கோவிட் உள்நாட்டு சூழ்நிலை காரணமாக இருவரும் விலகி இருப்பதாகவும், ஜோவின் வழிகாட்டியாகவும் வாழ்க்கைத் துணையாகவும் இருப்பதில், மகிழ்ச்சி அடைவதாகவும், டேவிட் கூறுகிறார்.

விரைவில் இருவரும் திருமணம் செய்து கொள்ளவுள்ளதாகவும், ஜோவின் பாஸ்போர்ட் தயாரானவுடன், தன்னைச் சந்திப்பதற்கு அவர் இங்கிலாந்திற்கு வருவாரெனவும், டேவிட் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

# கிறிஸ்மஸ் சந்தைகளை இலக்கு வைத்து இடம்பெறும் மோசடி

## -பொலிஸார் விடுத்துள்ள அறிவிப்பு-



பிரான்சில் கிறிஸ்மஸ் சந்தைகளை இலக்கு வைத்து போலி யூரோ தாள்கள் புழக்கத்தில் விடப்பட்டுள்ளதாக பொலிஸார் எச்சரித்துள்ளனர்.


குறித்த சம்பவம் தொடர்பில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு, பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். குறிப்பாக தென்கிழக்கு பிராந்தியங்களை இலக்கு வைத்து இந்த போலி யூரோ தாள்கள் பரவுவதாகவும், 20, 50 மற்றும் 100 யூரோ தாள்கள் புழக்கத்தில் விடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

நீஸ் நகரில் கடந்த வாரங்களில் இவ்வகை போலித் தாள்கள் கண்டறியப்பட்டதாகவும், போலித் தாள் ஒன்றை வைத்திருப்பதினால், மூன்று ஆண்டுகள் சிறையும், 75,000 யூரோக்கள் விதிக்கப்படுமெனவும், காவல்துறையினர் எச்சரித்துள்ளனர்.

கடந்த மாதத்தில் 130,000 யூரோக்கள் பெறுமதியான போலி யூரோ தாள்கள், கண்டறியப்பட்டுள்ளதாக, நீஸ் மாவட்டப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பண மோசடியில் ஈடுபட்ட 10 பேரை, இதுவரையில் கைது செய்துள்ளதாகவும், பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# ஐரோப்பிய நாடுகளின் செயற்பாடு குறித்து பாப்பரசர் கண்டனம்



குடியேறிகளை ஐரோப்பிய நாடுகள் நடத்தும் விதத்தை பரிசுத்த பாப்பரசர் கண்டித்துள்ளார். ஐரோப்பிய நாடுகளில் 'தன்னலம் மற்றும் தேசியவாதம்' நிலவுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கிரீஸ் நாட்டின் லெஸ்போஸ் தீவு குறித்து பேசியபோது, போப்பாண்டவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்தத் தீவு ஐரோப்பாவிற்கு வருகை தரும் பெரும்பாலான தஞ்சம் கோரிகளுக்கு, நுழைவிடமாகக் காணப்படுகின்றது.

கடந்த மாதம் பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா நடுவேயுள்ள கால்வாயொன்றில், தஞ்சம் கோரி வந்த படகொன்று மூழ்கியதில், 27 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டில் ஒமிக்ரான் கொரோனா வைரஸ் மாறுபாட்டினால், நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான தொற்றுகள் வேல்ஸில் ஏற்படுமென, சுகாதார அமைச்சர் எலுன்ட் மோர்கன் கூறியுள்ளார்.

வேல்ஸின் முதல் தொற்று கடந்த வெள்ளிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. வேல்ஸின் மிகப்பெரிய மருத்துவமனை, சனிக்கிழமையன்று, உயிருக்கு ஆபத்தான பிரச்சினை இல்லாவிட்டால் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு செல்ல வேண்டாமென்று பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது. இதற்கிடையில், அருந்தகங்கள் மற்றும் உணவகங்களுக்கு கொவிட் கால அனுமதி பத்திரங்களை நீடிப்பதற்கான முடிவு இந்த வார இறுதியில் எடுக்கப்படலாம். வேல்ஸ் அரசாங்கம் அதன் தடுப்பூசித் திட்டத்தை விரிவுபடுத்துகின்றது.

வெளிநாட்டுப் பயணத்துடன் இணைக்கப்பட்டுள்ள இந்த மாறுபாடு மிகவும் கடுமையான நோய்க்கு வழிவகுக்கும் என்பதற்கு, கணிசமான ஆதாரங்கள் எதுவும் இல்லையெனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இனி வரப் போகும் பாரிய தொற்று நோயை எதிர்கொள்வதற்கு உலகம் தயாராக வேண்டும்

## -மருத்துவப் பேராசிரியர் வலியுறுத்து-



எதிர்காலத்தில் ஏற்படும் தொற்றுநோய்கள் கோவிட்-19 ஐ விட ஆபத்தானதாக இருக்கலாம், எனவே கோவிட் தாக்கத்திலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடங்கள், வீணடிக்கப்படக்கூடாதென்பதுடன், மேலும் அடுத்த வைரஸ் தாக்குதலுக்கு உலகம் தயாராக இருப்பதை உறுதி செய்ய வேண்டுமென, ஆக்ஸ்போர்ட்-அஸ்ட்ராஸெனெகா தடுப்பூசியை உருவாக்கியவர்களில் முக்கியமான அதிகாரியொருவர் கூறியிருக்கிறார்.

ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் கூற்றுப்படி, கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் 5.26 மில்லியன் மக்களை அழித்தது மட்டுமல்லாமல், பொருளாதார உற்பத்தியில் டிரில்லியன் கணக்கான டொலர்களை அழித்துவிட்டது மற்றும் பில்லியன் கணக்கான மக்களின் வாழ்க்கையையும் தலைகீழாக மாற்றியுள்ளது.

'உண்மை என்னவெனில், அடுத்தது மோசமானதாக இருக்கலாம். இது மிகவும் தொற்று நோயாகவே இருக்கலாம், அல்லது அதிக ஆபத்தானதாக இருக்கலாமென ரிச்சர்ட் டிம்பிள்பி விரிவுரையில், சாரா கில்பர்ட் கூறியுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை வெளியாகியுள்ள தகவலின் படி, ஒரு வைரஸ் எங்கள் வாழ்க்கையையும் எங்கள் வாழ்வாதாரத்தையும் அச்சுறுத்தும் கடைசி முறை இதுவாக இருக்காது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் தடுப்பூசியியல் பேராசிரியர் கில்பர்ட், அடுத்த வைரஸுக்கு உலகம் சிறப்பாகத் தயாராக இருப்பதை உறுதி செய்ய வேண்டுமெனவும், நாங்கள் செய்த முன்னேற்றங்கள் மற்றும் நாம் பெற்ற அறிவை இழக்கக்கூடாது, என்றும் சாரா கில்பர்ட் கூறியுள்ளார்.

# முன்னாள் படை வீரர்களை வேட்டையாடும் தலிபான்களுக்கு சர்வதேச நாடுகள் கண்டனம்



முன்னாள் படை வீரர்களை குறிவைத்துக் கொலைசெய்வதை நிறுத்துமாறு, தலிபான்களை அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகள் வற்புறுத்தியுள்ளன. ஆப்கானிஸ்தான், கடந்த ஒகஸ்டு மாதம் 15 ஆம் திகதி தலிபான்களின் கைகளுக்குச் சென்றுவிட்டது. அது முதல் கொண்டு அங்கு தலிபான்களின் அதிகாரம் கொடி கட்டிப்பறக்கின்றது. அங்கு ஆப்கானிஸ்தான் முன்னாள் படை வீரர்களை தலிபான்கள் இப்போது குறி வைத்துக் கொல்வதாக, குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது. ஆகஸ்டு 15 ஆம் திகதி முதல் முதல் ஒக்ரோபர் 31 ஆம் திகதி இடையே மட்டும், தங்களிடம் சரணடைந்த ஆப்கான் முன்னாள் படையினர் 47 பேரை, தலிபான்கள் கொன்றுள்ளதாக, ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

இதை அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகள் கண்டித்துள்ளன.

இதனை முன்னிட்டு, 22 நாடுகள் கூட்டறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன. அதில், தலிபான்கள் அரசு, முந்தைய அரசுக்கோ அல்லது அதன் பாதுகாப்புப் படை வீரர்களுக்கோ தீங்கு விளைவிக்கக்கூடாதெனும் உறுதிமொழியை, தலிபான்களின் அரச நிர்வாகம் மதிக்க வேண்டுமென, வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதில், ஆப்கானிஸ்தான் முன்னாள் படைவீரர்கள் கொல்லப்படுவது, காணாமல் போகச் செய்வது போன்ற தகவல்களினால், மிகவும் கவலை அடைந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. அமெரிக்கா தலைமையில் இங்கிலாந்து, ஐரோப்பிய யூனியன் மற்றும் 19 நாடுகள் இந்த கூட்டறிக்கையில் கையெழுத்திட்டுள்ளன. கூட்டறிக்கையின் முடிவில், தலிபான்களை அவர்களின் செயல்களைக் கொண்டு, நாங்கள் தொடர்ந்து மதிப்பிடுவோமெனவும், எச்சரிக்கப்பட்டுள்ளது.

# ரஷ்யாவில் 2.81 இலட்சத்தையும் கடந்தது கொரோனா உயிர்ப்பலி எண்ணிக்கை

உலகளவில் கொரோனா வைரஸ் தொற்றினால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் வரிசையில், ரஷ்யா 5-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

ரஷ்யாவில் கடந்த சில வாரங்களாக, கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் வேகமெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன்படி ரஷ்யாவில் கடந்த 24 மணி நேரத்தில், புதிதாக 32,602 பேருக்கு, கொரோனா வைரஸ் தொற்று, உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் ரஷ்யாவில் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 98 இலட்சத்தையும் தாண்டியுள்ளதாகவும், கொரோனா தொற்றுக்கு இலக்காகி நேற்று முன்தினம் மட்டும், 1,206 பேர் உயிரிழந்தமையினால், அங்கு பலியானோர் எண்ணிக்கை 2.81 இலட்சத்தையும் தாண்டியுள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.இதனைத் தொடர்ந்து, தொற்றிலிருந்து 85 இலட்சத்திற்கும் அதிகமானோர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அங்கு மேலும் 10.17 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாக, அந்நாட்டு சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

# காய்ச்சலுக்கு சிகிச்சைபெற வைத்தியசாலைக்குச் சென்ற 3 வயதுக் குழந்தைக்கு கொரோனா தடுப்பூசி



கனடாவில், காய்ச்சலுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட 3 வயதுக் குழந்தைக்கு, கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மனித்தோபாவில் வாழும் Jezna Bardarsoz தனது மூன்று வயது மகளான டாலிக்கு ப்ளூ தடுப்பூசி பெறுவதற்காக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

தடுப்பூசி வழங்கப்பட்ட பின்னர், சுகாதாரத்துறை ஊழியர் ஒருவர் டாலிக்கு தவறுதலாக கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்க, டாலியின் தாய் பெரிதும் அதிர்ச்சியடைந்துள்ளார்.

முன்னதாக, குழந்தைகளுக்கு கூட தடுப்பூசி செலுத்துவதற்கும், அனுமதி அளிக்கப்பட்ட நிலையில் அந்த வயது வரம்பானது, 5 வயதிற்கு மேற்பட்டோருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால், டாலியைப் போல ஐந்து வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கு, எந்த கொரோனா தடுப்பூசியும் இதுவரை, அங்கீகரிக்கப்படவில்லை. Jezna விற்க்கும் தடுப்பூசி வழங்கப்பட்ட நிலையில், தாய்க்கும் குழந்தைக்கும், காய்ச்சலும் தலைவலியும் ஏற்பட்டதுடன், குழந்தை வாந்தியும் எடுக்க ஆரம்பித்துள்ளது. இதனால், Jezna Bardarsoz மிகுந்த கவலைக்குள்ளாகியிருக்கிறார்.

# மூன்று சிறுவர்கள் உட்பட ஐவரின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்பு

## - ஜேர்மனியை உறைய வைத்த படுகொலை-

ஜேர்மனியில் வீடொன்றில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவம், பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில்;, பொலிஸாருக்கு அளிக்கப்பட்ட தகவல்களின் படி, பொலிஸார் அந்த வீட்டிற்குச் சோதனை நடத்துவதற்குச் சென்றனர். அந்தச் சமயத்தில், குறித்த வீட்டில், மூன்று குழந்தைகள் உட்பட மொத்தம் 5 பேர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட நிலையில், காணப்பட்டனர்.சடலங்களைக் கண்ட பொலிஸார், பலியான அனைவரும் துப்பாக்கியால் சுடப்பட்டும், கத்தியால் குத்தப்பட்டும் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். மேலும், கொல்லப்பட்டவர்களில் இரண்டு பெரியவர்களும், 40 வயதுடையவர்கள் என்றும், குழந்தைகள் நான்கு, எட்டு மற்றும் பத்து வயதுடையவர்களென்றும், தெரியவந்துள்ளது.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.